குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 [பிரமோதூத ஆண்டு ஐப்பசித்திங்கள் 10-11-90 [இதழ் 12

402
1/12/90

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

கார்த்திகைச் சோமவார நாட்களில்
1008 சங்காபிஷேகம் கொண்டருளும் ஸ்ரீ அமிர்தகடேசுவரர்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தன்பிரம கீதைவே
தாந்தஞ் சிவாகமநூல்
இன்பமுயிர்க் குண்டென்
றியம்பியதேல் — இன்பஞ்சீ
வான்மாவிற் குண்டென்
றறைந்ததன்று நின்றபர
மான்மாவிற் குண்டென்ற தாம்.

— முத்திநிச்சயம் 16

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10-11-90 | இதழ் 12

உட்பொருள்

எண்		பக்கம்
1	சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு !	க
2	கார்த்திகைத் திருவிழா	... 555
3	தருமை ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 561
4	தருமை ஆதீனக் குருமூர்த்திகள் தோத்திரப் பாமாலை	... 571
5	சைவக் கிரியைகள்	... 575
6	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	... 579
7	போதமும் சித்தியும்	... 583
8	மண்டோதரி என்னும் மாண்புறு நங்கை	... 587
9	அருட் செல்வம்	... 591
10	செய்திகள்	... 593
11	கடிதம்	... 600
12	எதிர்காலம்	... 601
13	" ஞானசம்பந்தம் " 49 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்	... I-IV

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு!

திருத்தருமை ஆதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும், சிவ மணமும் பரப்பி, சிவஞானத்தேன் வழங்கிக் கற்போர்கருத்தைவளர்த்துவருவது ஞானசம்பந்தம். 49 ஆண்டுகள் நிறைவுபெறுகிறது. 50 ஆவது மலர் ஆண்டுக்கட்டணத்தை உடன் செலுத்தக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக்கட்டணம் அனுப்பியும் சந்தாதாரர்கள் சந்தாவை உரியகாலத்தில் செலுத்தியும் உதவி புரிந்து உயர்வு பெறுவார்களாக.

வேலைமிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச்சந்தா செலுத்துவதில் தடைஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெறவாய்ப்பு அளிக்கும்முறையில் ஆயுள்சந்தா ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளது. ஆயுள்சந்தா அறிவிப்புச் செய்த 19-2-1972முதல் இன்றுவரையில் 1308 அன்பர்கள் ஆயுள்சந்தா செலுத்தியுள்ளனர்.

ஆயுள்சந்தா செலுத்தினல் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்துதரப் படும். மேலும் தமது ஆயுள்சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி, அறநிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

ஆண்டுச் சந்தா செலுத்துவோர் 1991 ஜனவரி 31 தேதிக்குள், சந்தாத் தொகை கிடைக்கச்செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா

உள்நாடு	ரூ.	20—00
சிலோன் உள்பட வெளிநாடு	ரூ.	60—00

ஆயுள் சந்தா

உள்நாடு	ரூ.	200—00
சிலோன் உள்பட வெளிநாடு	ரூ.	600—00
தனிப் பிரதி விலை	ரூ.	1—75

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609 001,
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :- ஆயுள் சந்தாத் தொகை அனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 12

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - ஐப்பசி - 10—11—1990

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

கார்த்திகைத் திருவிழா

" வளைக்கை மடநல்லார் மாமயிலைவண் மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் "

— திருஞானசம்பந்தர்.

பிறந்தார் பெறும்பயன் :

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் இரண்டாம். 1. அடியவர்கட்கு அமுதளிப்பது. 2. விழாக் காலங்களில் இறைவனை அலங்கரித்துத் திருவீதிகளில் எழுந்தருளுவித்து வழிபடுவது. இதனை,

" மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார் "

எனவரும் பெரியபுராணத் திருப்பாடலால் அறியலாம்.

அபிடேகப் பொருட்கள் :

இத்தகையவிழாக்கள் திங்கள்தோறும் நடந்துவந்துள்ளன. இவ்விழா நாட்களில் இறைவற்குத் திருமுழுக்காட்டுதற்கு இன்ன இன்ன பொருள்களைக் கொள்ளவேண்டும் எனச் சூட்சும ஆகமம் கூறுகின்றது.

1. மார்கழி – நெய்
2. தை – தேன்
3. மாசி–நெய் தோய்த்த கம்பளம்
4. பங்குனி – தயிர்
5. சித்திரை – மருக்கொழுந்து
6. வைகாசி – சந்தனம்
7. ஆனி - பழவகைகள்
8. ஆடி – பால்
9. ஆவணி – சர்க்கரை
10. புரட்டாசி – அதிரசம், அப்பம் சாத்துதல்
11. ஐப்பசி – அன்னபிஷேகம்
12. கார்த்திகை – தீப பூஜை

இப்பொருள்களை மூலலிங்கத்தை வழிபடுதல் போலப் பூசை உபசாரங்கள் ஆகியவற்றைச் செய்து இறைவற்கு உரித்தாக்க வேண்டும் என்றும் இவ்வாகமம் கூறுகின்றது.

சிவாலயப் பெருவிழாக்கள் :

கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் புரட்டாசித் திங்கள் முதல், வைகாசித் திங்கள் வரை நடைபெற்று வந்த விழாக்களை ஞானசம்பந்தர் குறித்தருளுகின்றார்.

" ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய் "

இது பூரட்டாதியில் நடப்பது.

" ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணுதே போதியோ பூம்பாவாய் "

" தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய் "

" கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆர்திரைநாள் காணுதே போதியோ பூம்பாவாய் "

" நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய் "

" மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான் "

" அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணுதே போதியோ பூம்பாவாய் "

" பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய் "

" பண்ணுர் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணுரக் காணுதே போதியோ பூம்பாவாய் "

" கற்றூர்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றுப்புக் காணுதே போதியோ பூம்பாவாய் "

" கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரம்அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய் "

என வருவன அவர்தம் திருவாக்காகும். பொற்றுப்பு – வசந்த விழா: ஊஞ்சல் உற்சவம். இவற்றுள் சித்திரை அட்டமிநாளில் நிகழ்ந்த விழாக் குறித்து நாவுக்கரசர் மேலும் விளக்கம் பெறுமாறு குறித்தருளுகின்றுர்.

" ஆத்தமாம் அயனும்மாலும் அன்றிமற்று ஒழிந்ததேவர்
சோத்தம்எம் பெருமான்என்று தொழுதுதோத்
திரங்கள்சொல்லத்
தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கைவீ ரட்டனுரே "

என்பது அவர்தம் திருவாக்காகும்.

ஈண்டுக் குறிக்கப்படும் விழாக்கள் ஆண்டுதோறும் நிகழ்வன. ஆதலின் பெருஞ்சாந்தி என்பது குடமுழுக்கு

அன்றும், பெருஞ்சாந்தி - பவித்திரோற்சவம். இவ்விழா ஆனி முதலிய மூன்று திங்களிலும் நிகழும் என்பர். எனினும் இற்றை நாளில் திருக்கோவில்களில் நிகழும் விழாக்கள் நிறைவு பெற்றபின், ஒருநாளில் இவ்விழாவைச் செய்துவருகின்றனர்.

கார்த்திகைப் பெருவிழா :

கார்த்திகைப் பெருவிழா என்பது கார்த்திகைத்திங்கள் கார்த்திகைநாளில், மாலையில் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் திருவிளக்குகள் ஏற்றி, அவற்றின்வாயிலாக ஒளிவளர் விளக்காக விளங்கும் இறைவனை வழிபாடு செய்யும் திருவிழாவாகும். இவ்விழா சங்ககாலம் முதலே, தமிழர்களிடையே கொண்டாடப் பெற்றுவந்த விழாவாகும். முதலில் குறித்துள்ள பாடலில் ஞானசம்பந்தர் "துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகைநாள்" என்று குறிப்பிட்டு மிகப்பழமையான விழா என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

" நலமிகு கார்த்திகை நாட்ட வரிட்ட
தலைநாள் விளக்கில் "[1]

" கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றன "[2]

" இலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம்மலிவு தொகுபு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்ற "[3]

என வருவன இவ்விழாவைப் பொதுவகையில் குறிப்பனவாம்.

" மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம "[4]

---

[1] கார் நாற்பது - 26.
[2] களவழி நாற்பது - 17.
[3] அகநானூறு - 11.
[4] அகநானூறு - 141.

எனவரும் அகப்பாடலால் கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளொடு கூடிய நிறைமதிநாளில், இவ்விழா நிகழ்ந்தது என்பதும், அந்நாளில் தெருவை அலங்கரித்து வீடுகளில் விளக்கேற்றி வைத்து விழவயர்ந்தனர் என்பதும், இவ்விழா தலைவனும், தலைவியும் இயைந்திருந்து செய்தக்கது என்பதும் தெரியவருகின்றன.

" அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந்தோரே "[5]

எனும் பாடலில் பெருவிழா எனப் பொதுவகையால் குறிக்கப் பெறினும், இலவம் பூக்களை ஒப்பவரும் விளக்கம் எனவரும் உவமையால், ஈண்டுவரும் விளக்கம் விளக்கு என்பதும், உவமைப் பன்மையால் அவ்விளக்குகள் பல என்பதும், அவ்வாறுன விழா கார்த்திகை விளக்கீடு என்பதும் பெறுதும்.

" அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே " $[6]

எனவரும் நற்றிணைப் பாடலால் கார்த்திகைப் பெருநாளில் அறம் செய்தலைக் கடப்பாடாகக் கொண்டிருந்தனர் என்பதும் தெரியவருகிறது.

திருவண்ணாமலைத் திருக்கார்த்திகை :

சிவாலயங்கள்தோறும் இவ்விழா கொண்டாடப்பெறினும், திருவண்ணாமலையில் இப்பெருவிழாவைக் கொண்டாடும் பாங்கு மிகச்சிறப்புடையதாகும். மாலாயமால், அயன் ஆகியஇருவரும் வழுவானமனத்தாலேஇழிவாகும்கருவிலங்கும், பறவையுமாய்ச் சென்று இறைவனது திருவடியையும், திருமுடியையும் காண விழைந்தனர். தன்முனைப்பால் சென்ற அவர்கட்கு இறைவன் அருள்செய்திலர். பின் அவர்கள் திருவைந்தெழுத்தை ஓதி வழிபட இறைவன் அழல் உருவாய்நின்று காட்சியளித்தனன். அவ்வாறு அருள்செய்தவர் அண்ணாமலைநாதர்ஆவர். அவர்க்குக்

---

5 அகநானூறு - 185.

6 $ நற்றிணை - 202.

காட்சியளித்தது இக்கார்த்திகைப் பெருநாளிலேயாம் என்பர். அவ்வருள் திறத்தை நினைவுகூர்ந்தே திருக்கோயில்களிலும், வீடுகளிலும் திருவிளக்குகளை ஏற்றி, ஆதியும் அந்தமும் இல்லா அவ்வரும்பெரும் சோதியைக் கண்டு வழிபட்டுவருகின்றனர். இப்பேரொளி புறயிருளையும், அக இருளையும் ஒருங்குபோக்க வல்லதாம்.

" தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற்சோதீ "

" எனைத்தோருழி அடியார் ஏத்த இமையோர் பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவம்தீர்க்கும் நிமலர்உறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைமேல்குழல் ஊத
அனைத்தும் சென்று திரளும் சாரல் அண்ணாமலையாரே "

— திருஞானசம்பந்தர்.

கார்த்திகைத் தீபத் திருநாளில் - திருவிளக்கேற்றி ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதியனாகிய சிவபரம்பொருளை மன, மொழி, மெய்களால் வந்தித்து வணங்கி வாழ்வாங்கு வாழ்வோமாக !

" விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானமாகும். "

— அப்பர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான

திருவாவடுதுறை ஸ்ரீகோமுத்தீசுவரசுவாமி ஆலயத்தில்

நடைபெற்ற

திருமுறை வேள்வியில் வழங்கியருளிய

ஆசியுரை

13—9—1990

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

அன்பும் அறிவும் :

சைவசமயநூல்களைச் சான்றோர் தோத்திரம், சாத்திரம் என இருவகையாகப் பகுத்துள்ளனர். தோத்திரம் அன்பின் அடிப்படையில் எழுவது, சாத்திரம் அறிவின் அடிப்படையில் எழுவது. மெய் அன்பில் மெய்யறிவும், மெய்யறிவில் மெய்யன்பும் கலந்தே இருக்கும், இங்கு அன்பின் அடிப்படை அறிவின் அடிப்படை என்றது மிகுதி பற்றி எழுவதையே குறிக்கப்பட்டது. இறைவனது கருணைப் பெருக்கால் நடைபெறும் ஐந்தொழிற் சிறப்புக்களையெல்லாம் அன்பினால் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகப் புகழ்ந்து பாடுதல் தோத்திரம்எனப்படும். ஆனால் இப்புகழ், உண்மைக்கு மாருக உபசாரமாகப் பாடப்படுவதல்ல. பொருள் சேர் புகழே யாம். என்னெனில், மெய்யறிவும், மெய்யன்பும் உடையாரா கலின் இவர்களிடம் மறந்தும் பொய்ப் புகழ் வாராதென்க.

சாத்திரம் என்பதும் அன்புடையார் அறிவு மிகுதிப் பாட்டால் இறைவன் பெருமைகளையும், உயிர்களின் சிறுமை களையும், உலக இயல்புகளையும் திருவருள் வலிமையால் ஒக்க ஆய்ந்து மக்கள் கடைத்தேற அருளிச் செய்ததாகும். எனவே தான் " தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே " என்று இறைவனைப் பாடினர் அப்பர் பெருமான்.

தோத்திரமும் சாத்திரமும் :

இவ்விருதிறத்து நூல்களும் பொய்யன்பிலா அடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் வாய்க்கப் பெற்ற மெய்யுணர்வாளர்களால் அருளிச்செய்யப்பெற்றவை. இவ்விரு வகையிலும் பல நூல்கள் இருப்பினும் சைவ சமயாசாரியர் உள்ளிட்ட 27 ஆசிரியர்கள் அருளிய 12 திருமுறைகளே தோத்திரங்கள் எனப் போற்றப் பெறுவன. இதேபோல் சைவ சந்தாஞசாரியர் உள்ளிட்ட அறுவர் அருளிச்செய்த 14 நூல் களே சாத்திரங்கள் எனப் போற்றப் பெறுவன.

எழுகோடி மந்திரங்கள் :

இந்த அடிப்படையில் பார்த்தால், திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் தோத்திரத்தின் பாற்படும். ஆனல் இதில் தோத் திரத்தைவிட சாத்திரக் கூறுகளே அதிகம் உள்ளன. இது பத்தாந்திருமுறையாகப் போற்றப் பெறுவது. "மந்திரங்கள் எழு கோடி ஆதலினல் மன்னுமவர் இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து" என்பது திருமுறை கண்ட புராணக் கூற்று. எழுகோடிஎன்றல் ஏழுகோடிமந்திரங்கள் என்பதுபொருளல்ல. ஏழு முடிபுகளையுடையன மந்திரங்கள் என்பதே பொருளாகும்.

அவையாவன:- நமஹா, சுவாஹா, சுவதா, பட், உம்பட், வௌஷட், வஷட் என்பனவாம். நமஹா - ஐஸ்வர்யம் அளிப்பது. சுவாஹா - தேவதைகளைத் திருப்தி செய்வது. சுவதா - தைரியம், வசீகரம்கொடுப்பது. பட் - விக்கினங்களைத் துரத்துவது. உம்பட் - காமாதிகளைப் போக்குவது. வௌஷட் - தேவதைகளை இழுப்பது. வஷட் - தேவதைகளை வசம்செய்வது. திருமுறைகள் அனைத்துமே மந்திரங்கள் ஆகையினல் ஏழு முடிபுகளை வைத்தே மூவர் தேவாரங்களை 7 திருமுறைகளாக வகுத்தனர்.

யோகநூல் :

" பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினல் அந்த முறை நான்கினொடும் முறை பதினொன்ருக்கினர்," என்கிறது

திருமுறை கண்டபுராணம். அந்த முறையில் நான்கினெடு என்பது 8,9,10,11ஆம் திருமுறைகளைக் குறிக்கின்றது. "மந்திரங்கள் பதினொன்றும்" என்பது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம், ஆகிய ஐந்து பிரம்மமந்திரங்களும், இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் ஆகிய ஆறு அங்க மந்திரங்களும் கொண்டதாம். இவற்றுள் பத்தாவது மந்திரம் நேத்திர மந்திரமாக உள்ளது. எனவே பத்தாந்திருமுறையும் நேத்திரத்திற்கு ஒப்பாகக் கொள்ள இருப்பது. நேத்திரம் - கண். இறைவனுக்கு மூன்று கண்கள் உண்டு. வலதுகண் சூரியன், இடதுகண் சந்திரன், நெற்றிக்கண் நெருப்பு. அது புருவ மத்தியிலிருப்பது. இக்கண் ஆக்கல், அழித்தலுக்குப் பயன் படுத்தப்படும். முருகவேளை ஆக்கியதும், கருவேளாம் மன்மதனை அழித்ததும் இக்கண்ணேயாம். நமக்கும் மூன்று கண்கள் உண்டு. மூன்றாவது கண் யோக முயற்சியால் திறக்கப்படத்தக்கது. இதுபிராணாயாமப் பயிற்சியால் அடையத் தக்கது. இத்திருமந்திரம், தோத்திர நூல், சாத்திர நூல் என்று போற்றப் பெற்றாலும், பெரும் பகுதி யோக நூலாகவே காட்சி தருகிறது. எனவே பத்தாவது மந்திரமாகிய நேத்திரத்திற்கு ஒப்பான இதனைப்பத்தாந்திருமுறையாக அமைத்தனர் என்பது திருமுறை கண்டபுராணத்தால் உணர நேர்கிறது.

மூலன் உடலில் புகுமுன் :

திருமந்திர ஆசிரியருக்கு அவர் தம் தாய் தந்தையர் இட்ட பெயர் சுந்தரர் என்பதாம். இவர் தென் தமிழ்ப் பொதியத்தில் அகத்தியர் தமிழ்ச்சங்கத்தில் உலக நூல் கற்றார். அவர் ஆதரவால் அறிவு நூல்களைக் கற்கவடகயிலையில் நடைபெற்ற குருகுலத்தில் அறிவு நூல்களாம் வேதாகமங்களை நந்தியெம் பெருமானிடம் கற்று நாதர் என்ற பட்டமும் பெற்றுத் தவம் செய்திருந்தார். அங்கு இவருடன் பயின்றோர். சனகர் சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், சிவயோகமாமுனிவர் ஆகியோராவர்.

பதஞ்சலி, வியாக்ரபாதருடன் இவர் ஒருமுறை தில்லைவந்து நடன தரிசனம் செய்து திருக்கயிலை மீண்டார். பதஞ்சலி, வியாக்ரபாதர் இருவரும்தில்லையிலேயே ஆச்சிரமம் அமைத்துத் தங்கி விட்டனர்.

பெரியபுராணம் :

சுந்தரநாதர் அகத்தியரைக் காணும் விருப்பினல் திருக் கேதாரம், பசுபதிநாதம், காசி, விந்தியமலை ஸ்ரீ பர்ப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், தில்லை ஆகிய

தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறை சேர்ந்தார். ஸ்ரீ மாசிலா மணி ஈசரைத் தரிசித்தார். உள்ளம் துறைசையை நாடியபோதி லும் பொதியமலைக்குப் புறப்பட்டனர். காவிரிக் கரையில் சாத்தனூர் அந்தணர்களின் பசுக்கள் வினைமாள இறந்த மூலன் என்ற இடையன் உடலைச் சுற்றிக்கதறின. செந்தண்மைபூண்ட அந்தணராகிய சுந்தரநாதர் பசுக்களின் துன்பத்தைப் போக்கத் திருவுளம் கொண்டார். தமது உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு தம் உயிரைப் பிராகாமியம் என்ற சித்தியினால் பவன வழியாக அம்மூலன் உடலில் பாய்ச்சினர். மூலன் எழுந்தான். பசுக்கள் மகிழ்ந்தன. மாலையில் வீடு சேர்ந்தன. இவர் ஊர்ப் பொது மடத்தில் தங்கினர். மனைவியுடன் தொடர் பில்லை என்பதை மக்கட்கு அறிவித்தார். மறுநாள் தாம்சேமித்து வைத்த உடல் காணப்படவில்லை.

இல்லாளன் :

திருவருள், துறைசையில் தவமியற்றப் பணித்துள்ளதைத் திருவருளால் உணர்ந்தார். திருக்கோயிலின் மேல்பால் படர் அரசின் கீழிருந்து ஆண்டுக்கு ஒரு பாவாக மூவாயிரம் ஆண்டு தவம்செய்துமூவாயிரம் திருமந்திரம் மொழிந்தார். மூலன்மனைவி, மூலன் உடலில்புகுந்த சிவயோகியாரின் நிலைகண்டுவருந்தினள் இந்த இடத்தில் இல்லாளன் என்ற அரியதொரு சொல்லைச் சேக்கிழார் எடுத்தாள்கிறார். "இல்லாளன் இயல்பு வேறானமை கண்டு" என்பது அப்பகுதி. மற்றும் காரைக்காலம்மையார் வாயிலாகவும், "இல்லாளன் வைக்க எனத் தம் பக்கல் முன்னிருந்த, நல்ல நறுமாங்கனிகள்" என்ற இடத்திலும் இவ் வரிய சொல்லை ஆள்கிறார். இல்லாள் என்ற பெண்பாற்சொல் இல்லத்தை ஆள்பவள் என்று பொருள் தருகிறது. ஆனால் அதற்கு நேராக உள்ள இல்லான் என்ற ஆண்பாற்பெயர் இல்லாதவன் என்பதைக் குறிக்கிறது என்பர் சிலர், அவர்களைத் தெளிவிப்பாராக இவ்வரிய சொல்லை இவ்விரு இடங்களில் காட்டியுள்ளார்.

வேதாகமம் :

வேதகாலம் கி. மு. 6000ம் என்பர். கி. மு. 3100ல் இவை குழப்ப நிலைபெற்றன. அப்போது அக்குழப்பத்தைத் தெளி வித்தார் என்பர். அதற்கேற்ப வேதச் சிறப்பு என்ற பகுதியில் "சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே" என்றும், "ஆகமச் சிறப்பு" என்ற பகுதியில் "சிந்தை செய்து ஆகமம் செப்ப லுற்றேனே" என்றும் குறித்துள்ளமையால் தெளியலாம். வேதத்தை விட்ட அறமில்லை என்றும், வேதத்தில் ஓதத்தகும் அறங்கள் எல்லாம் உள்ளன என்றும், தர்க்கவாதத்தைவிட்டு,

வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றுர்கள் என்றும், வேத மோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் என்றும், வேதம் பொதுவும், ஆகமம் சிறப்புமாகும்என்றும், நந்தியெம்பெருமான் வாயிலாக நமக்குக் கிடைத்த ஆகமங்கள், காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பதே என்றும், அவ்வொன்பது ஆகமங் களின் சாரங்களைத் திருமூலர் ஒன்பது தந்திரங்களாகப் பாடி புள்ளார் என்றும் தெளியலாம். பாயிரத்தோடு கூடிய ஒன்பது தந்திரங்களையும் " காலைஎழுந்து கருத்தறிந்து ஓதிடின் ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே " என்று பலனும் கூறியுள்ளார்.

" மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றுமே "

என்ற பாடலை வைத்து முப்பது உபதேசம் என்பதும், முந்நூறு மந்திரம் என்பதும், தனித்தனி நூல்கள் என்றும், அந்நூல்கள் மூலன் உடலில் புகுவதற்கு முன்னர் சுந்தரநாதர் செய்தது என்றும், மூலனாக வந்த பிறகு செய்தது, மூவாயிரம் தமிழ் ஒன்றே என்றும் கூறுவர். முப்பது உபதேசம் என்று இத் திருமந்திரத்திலேயே இருப்பதனால், மூன்றும் திருமூலராயிருந்து அருளிச்செய்ததே என்று கொள்ளுதலே பொருத்தம் என்றும் தோன்றுகிறது.

பாயிரம் :

ஒரு மனிதனைப் புரிந்து கொள்ள முகம் இன்றியமையாதது. அதுபோல் ஒருநூலுக்கு முகவுரை இன்றியமையாதது. முக வுரையைத்தான் பாயிரம் என்கிறோம். இதில் பொதுப்பாயிரம், இந்நூலைப்பற்றியது. சிறப்புப்பாயிரம் இவரைப்பற்றி மாணுக்கர் கள் செய்தது. தற்சிறப்புப் பாயிரம். தம்மைப் பற்றித் தாமே கூறியது ஆக முப்பாயிரமும் இதில் இடம் பெற்றுள்ளன.

சிறப்புப் பாயிரத்துள் குருமடவரலாறும், திருமந்திரத் தொகைச் சிறப்பும் உள்ளன.

பொதுப்பாயிரம் 1 கடவுள், 2 மழை, 3 நீத்தார், 4 அறம், 5 முடியுடைவேந்தர் என்ற ஐவகை வாழ்த்துக்களை உடையது. திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்து என்ற பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், என்று அமைத்திருப்பது ஒப்புநோக்கத்தக்கது. அரச வாழ்த்தை பொருட்பாலில் புகன்றுள்ளார். இதனால் தான் " தேவர் குறளும் ...... திருமூலர் சொல்லும் ஒருவாசகம் ", என்றனர்.

காலம் :

இவர் காலம். கி. மு. 3100ல் இருந்து கி. மு. 100 என்று துடிசைகிழார்குறிப்பிடுகிறர். மற்றையஆய்வாளர்கள் ஏறத்தாழ கி.பி. ஐந்தாம்நூற்ருண்டு என்று கொண்டுள்ளனர். கி.பி. 3ஆம் நூற்ருண்டு முதல் 6 ஆம் நூற்ருண்டு வரை தமிழக வரலாற்றில் இருண்டகாலம் எனக் கொள்கின்றனர்.

" முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும் "

" ஈசன் அடியார் இதயம் கலங்கிட
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும் "

என்பன போன்ற பாடல்கள் இருண்ட காலத்தின் கொடுமைகளைக்கூறுவன போன்றுள்ளமையால் இவர் காலம் ஐந்தாம் நூற்ருண்டாகக் கொள்ளத் துணைசெய்கின்றன.

கலிவிருத்தச் சிறப்பு :

திருமந்திரம் முழுவதும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளைகளாலான கலிவிருத்தங்களாலாயது. பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், கம்ப ராமாயணம் ஆகியபெருங்காப்பியங்களில் கடவுள் தோத்திரங்களாகவுள்ள பாடல்கள் அனைத்தும் இக்கலிவிருத்தப்பாடல்களாலாயது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. ஒன்பது தந்திரங்களைக்கொண்டது, 232 தலைப்புக்களில் இந்நூல் நடையிடுகிறது. திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளில் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அவர் ஒவ்வோரதிகாரத்திற்கும் பப்பத்துக் குறள் வெண்பாக்கள் பாடியுள்ளார், ஆனல் திருமூலரோ ஒவ்வொரு தலைப்பிலும் வரையறையின்றி 2 பாடல்கள் முதல் 100 பாடல்கள் வரை பாடியுள்ளார். கூடுதல் 3047 பாடல்கள் உள்ளன. 3000ம் பாடல்களே இருத்தல் வேண்டும், ஒரேபாடல் முழுவதும் அப்படியேயும், சிலமாற்றங்களுடனும் பலவிடத்தும் வந்துள்ளது. இடைச்செறுகலும் சேர்ந்துள்ளது. இஃதன்றிச் சில ஏட்டுப் பிரதிகளிலும், உரைகளிலும் காணப்படும் பாடல்களும் 22 உள்ளன.

நூல் அமைப்பு :

பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, குருபாரம்பர்யம், திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமடவரலாறு, திருமூர்த்திகளின் சேட்டகனிட்டமுறை என்ற ஒன்பது தலைப்புக்களும் அவற்றுள் 112 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

முதல் தந்திரம் உபதேசம் முதலாகக் கள்ளுண்ணமை ஈறுக 21 தலைப்புக்களில் 224 பாடல்களைக் கொண்டுள்ளது. இரண்டாந்தந்திரம் அகத்தியம், பதிவலியால்வீரட்டம் எட்டு முதலாக பெரியாரைத் துணைக்கோடல் ஈறுக 25தலைப்புக்களில் 112 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. மூன்ருந்தந்திரம் அட்டாங்கயோகம் முதலாக சந்திரயோகம் ஈறுக 21 தலைப்புக்களில் 335 பாடல்களைக்கொண்டு விளங்குகிறது.

நாலாந்தந்திரம், அசபை முதல் நவாககரி சக்கரம் ஈறுக 13தலைப்புக்களில் 535பாடல்களைக் கொண்டிலங்குவது. ஐந்தாந் தந்திரம், சுத்த சைவம் முதல் உட்சமயம் முடிய 23 தலைப்புக்களில் 154 பாடல்களைக் கொண்டுள்ளது. ஆருந்தந்திரம், சிவகுருதரிசனம் முதல் அபக்குவன் முடிய 13 தலைப்புக்களில் 131 பாடல்களைக் கொண்டுள்ளது. ஏழாந்தந்திரம், ஆருதாரம் முதல் இதோபதேசம் முடிய 38 தலைப்புக்களில் 418 பாடல்களைக்கொண்டு இலங்குவது. எட்டாந்தந்திரம் உடலில் பஞ்ச பேதம் முதல் சோதனை முடிய 43 தலைப்புக்களில் 527 பாடல்களைக்கொண்டு விளங்குகிறது. ஒன்பதாந்தந்திரம் குருமட தரிசனம்முதல் சர்வவியாபிமுடிய 32 தலைப்புக்களில் 399 பாடல்களைக் கொண்டு நிறைகிறது. ஆக பாடல்கள் 3047.

முதல் தந்திரம்

முதலில் சிவபரத்துவம் கூறுகிருர். சிவனெடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்பது முதலாக 46 பாடல்கள்களில் இதனை விளக்குகிருர். இது காரணுகமத்தின் சாரமாகத்கழ்வதுதி. "ஞான முதல் நான்கும் மலர் திருமந்திரம் மாலை" என்ற சேக்கிழார் வாக்கிற்கேற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளைப் பற்றி விளக்க வந்தவர் முதலில் சிவபரத்துவம் கூறி, பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை விளக்குகிருர்.

> "பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப்போல் பசுபாசம் அனுதி
> பதியினைச் சென்றணு காப்பசுபாசம்
> பதி அணுகில் பசு, பாசம் நில்லாவே"

என்பது அப்பாடல். கடவுள், உயிர், மலம் என்ற மூன்றுமே என்றும் உள்ள உண்மைப் பொருள்கள். ஆனல் கடவுளை உயிர்களும், மலமும் சென்றடையா, பதியாகிய கடவுள் பசுவாகிய உயிரை அணுகுவார். அணுகினல் உயிரைப் பற்றி நிற்கும்பாசமாகியமலம் அகலும். அகன்ருல் உயிர் கடவுளுடன் கலந்து பேரா இன்பப் பெறுவாழ்வுபெறும்.

இறைவன் உயிர்களை அநாதியாகவே பற்றி நிற்கும் மலமாகிய அழுக்கை அகற்றுதற்குக் கருணையினால் உடல், கரணம், புவனம், போகங்களைக்கொடுக்கிறான்; அவற்றைஉயிர் அநுபவிக்கும் போது நல்லது கெட்டதை அறிவதற்கும், நிலையானவை நிலையில்லாதவை இன்ன என உணர்ந்து நிலையானவற்றைப் பற்றி உய்தற்பொருட்டும், வேதாகமங்களை அருளி, அதன் வாயிலாக இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையைஉணர்த்தியும், வேதத்தில் விதிக்கப்பட்ட கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, நடுநிலைமை, அன்புடைமை முதலாய அறங்களை வற்புறுத்தியும், அந்நெறிபற்றி உயரும் உயிர்கள் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் என்னும் இவ்வழியே சென்றுசிவபோகம் துய்த்து உப்பானதுதண்ணீரில் கூடி தன்னிலை கெட்டு தண்ணீராகவே ஒன்றாகுமாறு போல் சீவன் சிவத்துள் அடங்கும் என்ற எடுத்துக்காட்டுடன் நிறைவு செய்துள்ளார்.

பாயிரம் – கடவுள் வாழ்த்து :

இதில் முதல் பாடல் "ஒன்றவன்தான்" என்பது. இதனைச் சேக்கிழார், "பான்மை முறை ஓராண்டுக் கொன்றாகப் பரம் பொருளாம் ஏனஎயிறணிந்தாரை "ஒன்றவன்தான்" என எடுத்து என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார்,

" ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான் குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறுவிரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந்தான் உணர்ந்தெட்டே "

ஏகம்சத் என்பது வேதம். ஒருவன் என்னும் ஒருவன் காண்க என்பதுதிருவாசகம். ஒருவனேதேவன் என்பதுஇத்திருமந்திரம். இறைவன் ஒருவனே என்பதைத்தான் திருமூலர் "ஒன்றவன் தானே" என்று முதலில் குறிப்பிட்டார். அடுத்து தன்னிடமிருந்து பிரிப்பின்றி நிற்கும் ஆற்றலை அதாவது அருளை இரண்டெனக்கொண்டுள்ளார். இரண்டவன் இன்னருள் என்பதில் அவனது அருள் இருதிறப்படும் என்ற பொருள்பட அறக்கருணை, மறக்கருணையைக் குறிப்பிட்டுள்ளார். நின்றனன் மூன்றினுள் என்பது ஒடுக்ககாலத்தும், அனுபவகாலத்தும், செயற்படுங்காலத்தும் அவற்றுள் நிற்பவன் என்றார். இலய போக அதிகாரத்துள் நின்றமையை இது குறிப்பிடுகிறது. நான்கு உணர்ந்தனன்என்பது. அறம், பொருள்,இன்பம், வீடென்னும் நான்கனையும் தானே உணர்ந்து உயிர்கட்கு உணர்த்துபவன்

என்பதைக் காட்டுகிறது. " ஐந்துவென்றனன் " என்பது. ஐந்தவித்தான் என்ற திருக்குறள் கருத்தும், " நேரிழையைக் கலந்திருந்தே, புலன்களைந்தும் வென்றானை " என்ற அப்பர் திருவிழிமிழலைத் தாண்டகச் கருத்தும் புலப்படத் தோன்றுவது. ஆறுவிரிந்தனன் என்பது மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறுவழிகளாக விரிந்தனன் என்பதை உணர்த்துகிறது. " ஏழுஉம்பர்ச் சென்றனன் " என்பது பிரம லோகம், விஷ்ணுஉலகம், உருத்திரலோகம், மகேசுவரலோகம், சதாசிவலோகம், சக்திலோகம், சிவலோகம் என்னும் ஏழுலங் கட்கும் மேற்சென்று நின்றவன் என்பதை உணர்த்தும், அங்கு அவன் தனித்துச் செயற்படாது இருந்தான் அவனை நெஞ்சமே நீ உணர்ந்து எட்டு-அடைவாயாக. என்றுபூர்த்திசெய்துள்ளார்.

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த உள்ளப்பாங்கை உணர்த்தும் பாடல் பாயிரத்துள் காட்சி தருகிறது. யாக்கை நிலையாமையை "அடப்பண்ணி வைத்தார்" என்ற அரிய பாடலால் விளக்கியுள்ளார். "தெளிவு குருவின் திருமேனிகாண்டல்" என்றதிருமந்திரம்"நல்லாரைக்காண்பதும் நன்றே" என்ற பாடலை நினைவு கூர்கிறது. "யாவர்க்கும் ஆம் இறைவர்கொரு பச்சிலை" என்ற பாடலால் எளிய அறம் நான் கினை விளக்கியுள்ளார். அன்பே சிவம் என்பதை "அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்" என்றபாடலால் விளக்கியுள்ளார்.

இரண்டாந்தந்திரம் :

முதல் தந்திரத்தில் கூறியபடி நின்றவர்கள் அடையும் நன்மைகளையும், நில்லாதவர் அடையும் தீமைகளையும் புராண வாயிலாக விளக்கியுள்ளார். அசுரர்களைப் பொதியமலைக்கு வடக்கே செல்லவொட்டாமல் தடுத்த அகத்தியர் திறத்தினை அகத்தியம் என்ற தலைப்பிலும், அட்டவிரட்டச் செயல்களைப் பதிவலி என்ற தலைப்பிலும், அயனுக்கு வாளும், அரிக்கு ஆழியும்,இராவணனுக்குநாளும்வாளும்கொடுத்தது,சூரபன்மன் வதம், சண்டீசர் பதம் பெற்றமை இலிங்க புராணப்பகுதியிலும் குறித்துள்ளார். திருமால் சக்கரம் பெற்ற வரலாறு சக்கரப்பேறு என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. பிரமவிஷ்ணுவின் அகங் காரத்தைப் போக்கிய பகுதி "அடி முடிதேடல்" என்ற பகுதி யிலும் பரமன் எலும்பும் கபாலமும் ஏந்திலனேல் ஐந்தொழில் நடைபெறு என்பதை 'எலும்பும் கபாலமும்" என்ற பகுதியிலும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் முறையே அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவனாய் நின்று செயல்படும் திறனையும், புவனங் களையும் அதில் உள்ள எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவபேதங் களையும் பரிபாலிக்கும் திறனையும் விளக்கிக்காட்டுகிறது.

ஒருமலமுடைய விஞ்ஞானகலர், இருமலமுடைய பிரளயாகலர், மும்மலமுடைய சகலர், உற்பவிக்கும் முறை "கரு உற்பத்தி" என்றதலைப்பிலும், உற்பவித்த சீவர்கள் குருநித்தை, சிவநித்தை, மாகேசுவர நிந்தையின்றி பெரியாரைத்துணைக் கொண்டு சத்பாத்திரம் அசத் பாத்திரம் தெரிந்து ஒழுகினோர் இறைவனடி சேர்வர் என்று விளக்கியுள்ளார்.

மூன்றாந்தந்திரம் :

எண்வகை யோகங்களைக் கூறுவது. இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவை. தவிர்க்க வேண்டிய கெட்டபழக்கங்களை விடுதல் இயமம் எனப்பெறும். நடக்க வேண்டியநற் பழக்கங்களை மேற்கொள்ளுதல் நியமம் எனப்பெறும். யோகம் பயில்வோர் அமர்ந்திருக்கும் நிலை ஆசனம் எனப்பெறும். மூலாதாரத்தில் மூண்டெழுகனலை பிராணவாயுவினுல் எழுப்பி, முறைப்படுத்தும்நிகழ்வே பிராணயாமம்எனப்படும். மனத்தைப் பொறி வழிபோகவிடாது அகமுகமாக ஆறு ஆதாரங்களில் நிறுத்துதல் பிரத்தியாகரம் எனப்படும். பொறுமை தாரணை எனப்படும். இடையறுது நினைத்தல் தியானம் எனப்படும். இறையுடன் கலத்தல் சமாதி எனப்பெறும். யோக சித்திகளைப் பெறக்கருவியாயிருக்கும் உடம்பை அழியாதபடி நோயின்றிக் காக்கும் வழிகளை 'காயசித்தி' என்ற தலைப்பிலும், உடம்பைப் பக்குவப் படுத்தவேண்டிய வாரசரம், வாரசூலை, அமுரிதாரணை' ஆயுள்பரீட்சை, காலசக்கரம் முதலியவற்றால் விளக்கிப்பின் கேசரியோகம், பரியங்கியோகம், சந்திரயோகம் முதலியவற்றை விளக்கி சிவயோகங்கள் எல்லாவற்றினும் அட்டாங்கயோகமே சிறந்தது என்று முடித்துள்ளார்.

கேஸரியோகம்என்பது அடயோகத்தின் பாற்படும். கடினமானது எல்லோரும் பயிற்சி செய்ய இயலாதது. பரியங்கி யோகம் இல்லாளுடன் கூடிச் செய்வது. இது கருத்து ஒருமித்த காதலனும் காதலியும் கூடிச் செய்வது. இதுவும் எல்லோருக்கும் இயல்வதன்று. சுந்தரர், பரவையர், சங்கிலியாருக்கும் திருவள்ளுவர், வாசுகிக்கும் ஏற்றது. சந்திரயோகம், என்பது சந்திரன் கலை 16. சூரியன் கலை 12. அக்கினி கலை 64. தாரணை கலை 4. ஆக 96 கலைகளையும் அறிந்து வளர்பிறை தேய்பிறைகளில் பயிலப்படும் யோகம். இவற்றுள் அட்டாங்கயோகமே சிறந்தது. மேற்கொள்ளத்தக்கது என்று நிறைவு செய்துள்ளார்.

இன்று இம்மூன்று தந்திரங்களையும் திருமூலர் அருள்பெற்ற இப்புனிதத் தலத்தில் சிந்திக்கும் வாய்ப்பக் கிடைத்தமைக்குப் பெருமான் அருளைப் போற்றி இதில் பங்குகொண்ட அனைவருக்கும் அனைத்து நலன்களும் பெருக வேணுமாய் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

மூலன் உரைசெய்த தந்திரம் மூன்றும்
ஏல உணர்ந்தோர் இன்புற்றிருப்பரே"

தருமை ஆதீனக் குருமூர்த்திகள் தோத்திரப் பாமாலை

தருமை ஆதீனப் புலவர்
டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

(மலர் 49, இதழ் 11, பக்கம் 520 இன் தொடர்ச்சி)

6. திருஞானசம்பந்த தேசிகர்

பதினறு கலையொடுக்கும் பரிபாகத்துப்
பக்குவர்க்கு உபதேசம் பல புரிந்து,
துதிவேள்வி மலையடைந்து 'வள்ளித் தாயின்
தோற்றமிங்கே இலையோ' என்றருளால் வேண்ட
மதிமுகமார் வள்ளியம்மை காட்சி நல்க
மகிழ்ந்தகுரு; தமிழாகரர் தம்மை வாய்மை
பொதிந்திடவே ஏற்றதிரு ஞானம்பெற்ற
சம்பந்தர் பொன்னடிகள் போற்றி வாழ்வாம்! (8)

7. திருவம்பல தேசிகர்

அன்பர்உரை தனையேற்றே அன்னை யார்க்குத்
தகுமுத்தி தனையளித்தும், தஞ்சை மன்னன்
வன்முறையே குருநாதர் கோயிற் காற்ற
வண்டமிழால் ஈசனடி வழுத்திச் சற்றும்
நன்னெஞ்சம் கலங்காத ஆன்ம வீர
ஞானகுரு வருணச்சி ரமசந்திரிகையாம்
நன்னூலை அருளியருள் மரபு காத்தும்
அமர்ந்ததிரு அம்பலவர் அடிகள் போற்றி! (9)

8. அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்

பரிகலச்சே டம்அருளி மகப்பே றெய்தப்
பரிந்தருளுந் திருக்கருணை வடிவம் ஆகித்
தெரிஞானப் பனுவல்பல சீடர்க் கெல்லாம்
தேர்ந்துரைத்துத் தென்பாண்டிப் பயணம் செய்து,
"பரஞானத்தால் பரத்தைத் தரிசித் தின்பப்
பயனெய்திப் பதார்த்தங்கள் பாரார்" ஆகி
வருநாமம் அழகியசிற் றம்ப லத்து
வள்ளலடி உள்ளிருத்தி வணக்கம் செய்வாம்! (10)

9. திருநாவுக்கரசு தேசிகர்

புள்ளிருக்கு வேளூரில் செவ்வேள் முன்பு
பொலிந்துதிரை விலகவருள் பெற்ற பெம்மான்,
உள்ளுருகி வைணவனின் பக்தி கண்டு
உரைவிரிக்கும் திருவருளி, குயில்செம்போத்து
கிள்ளையொடு பூனைபட அரவந் தம்முட்
கிளர்ஞான உணர்வுபெற முத்தி நல்கி
தெள்ளுணர்விற் "சித்தாந்தம் நிச்ச யித்த"
தேசிகனுர் திருநாவுக்கரசர் திருத்தாள்கள் போற்றி!(1)

10. சிவஞான தேசிகர்

சித்தருக்குச் சிவதீக்கைப் பேறு நல்கிச்
செழும்பிஞ்சைக் கனியாக்கி, தந்தை வீடு
நித்தமுற வேண்டுமென்ற குறிப்பை யீந்து,
நெடும்பிணியால் வந்தோனைத் தூயனுக்கி
சுத்தமிலாப் போற்றிகளை ஊமை யாக்கித்
துங்கன்மகன் பிணிபோக்கி வார ணுசிப்
புத்தமுதத் திருவருட்பா போந்து பாடும்
புனிதசிவ ஞானகுரு பொற்ருள் போற்றி! (12)

11. சச்சிதானந்த தேசிகர்

வேற்றுருவில் வந்தகுறு மன்னன் வேண்ட
விரைந்திரவிற் சோறீந்து மெய்மை தோற்றி
"சாற்றிடுமப் பாத்திரத்தை அரண்மனைக்குள்
சார்த்துக"என் றருளியவன் பணிந்து போற்றி
நாற்றிசையும் புகழ்பரப்பக் குழகர் கோடி
நற்றீர்த்த மாடுங்கால் நஞ்சுப் பாலை
மாற்றமின்றி நீறிட்டுப் பருகி வாழ்ந்த
சச்சிதா னந்தகுரு மலர்த்தாள் போற்றி! (13)

12. முத்துக்குமார தேசிகர்

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" என்ற
விழுப்புகழார் நாவரசர் வாக்கை ஏற்றுத்
தூண்டுபுகழ் மெய்யடியார் புடையே சூழத்
தொல்பாண்டி யாத்திரைகள் பலபு ரிந்து
வேண்டிடவே மடைப்பள்ளிப் பரிகலத்தை
விழைவுடனே உண்பித்து மகப்பே றெய்த
ஈண்டியபே றருளாலே வழங்கும் எங்கள்
எழில்முத்துக் குமரரடி ஏத்தி வாழ்வாம்! (14)

13. ஞானசம்பந்த தேசிகர்

"அன்புமிக உண்டாகி விவேகம் உண்டாய்
அருந்துயரைத் தீர்க்கின்ற தாகம் உண்டாய்"
முன்புபணிந் தெழுந்தொண்டர் ஞானம் எய்த
மோனுப தேசத்தைச் செய்தும், வல்ல
தென்புலவர் புடைசூழச் சீடர்க் கெல்லாம்
திருநோக்காற் பரிசத்தால் தீக்கை செய்தும்
நன்புலமை மிகப்புரந்தும் நமைப்புரந்த ஞான
சம்பந்த தேசிகர்தம் நற்ருள் போற்றி! (15)

14. கந்தப்ப தேசிகர்

தென்பாண்டி யாத்திரையில், அன்பர் வேண்டத்
திருவருளை மிகவியந்து, திருவாக் காலே
முன்பாகப் பெருமழையைப் பெருகச் செய்த
மோனகுரு. சீடர்தரு கங்கை வெள்ளம்
இன்பார நீராடி, அடியார்க் கெல்லாம்
இடர்நீக்கி, மருள்போக்கிச் சொக்கர் பாதம்
என்புருக வழிபட்ட எங்கள் தெய்வம்
எழிலாரும் கந்தப்பர் இணைத்தாள் போற்றி! (16)

15. மாசிலாமணி தேசிகர்

வானம்பொய்த் தருமழையும் வீழா தாக
வருந்துயரம் கண்டருளிச் சொக்க நாதர்
ஞானமுறுஞ் சந்நிதியிற் "புலனைத்" தென்ற
நவில்பதிகம் சாரங்கி தனில் இசைத்த,ஞானி
மோனகுரு, கங்கைநீர் ஆடச் செய்தோர்
முற்றருளை யாத்திரையாற் பெற்ற சீரார்
ஞானகுரு மாசிலா மணியார் பாதம்
ஞாலமிசைச் சீலமிகப் பணிந்து வாழ்வாம். (17)

16. சச்சிதானந்த தேசிகர்

"சூரியகாந் தக்கல்வி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்றுமாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளாற் றேன்ற
அடிஞானம்" நிறைந்தகுரு பிர்மசூத்ரம்
நேருரையை நிகழ்வித்து வெள்ளப் பள்ளம்
நெகிழ்ந்தேற்றுச் "சச்சிதா னந்த மாலை" சூடித்
தாருலவு கொன்றைமுடிச் சொக்கர் பாதத்
தலமமர்ந்த சச்சிதானந் தர்அடி போற்றி. (18)

17. மாணிக்கவாசக தேசிகர்

திருப்பணிகள் திருமடத்தும், கடவூர் வேளூர்
திருத்தலங்கள் பலபணிகள் பன்னாளும் புரிந்தும்,
திருப்பனசைத் தலைமையமர் கண்மணிக்குத்
திருத்தருமைத் திருக்கூட்டப் பெருமை நல்கி,
ஒருப்பட்ட உளமுடைய பக்குவர்க்கே
உபதேசம் பலவருளி மெய்ஞ்ஞா னத்தே
விருப்பமுற அருள்வழங்கும் பெருமாணிக்க
வாசகனார் மலரடிகளை வணங்கி வாழ்வாம். (19)

18. சிவஞான தேசிகர்

"சிவனையவன் திருவடிஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லாம்
அவனையணைந் தின்புறலே தக்க" தென்றே
அருளார உபதேசித்தும், சீரார் காழி
சிவானந்த முனிவர்க்கருளும் நின்றியூர்க் கோயில்
நிறைநீரால் குடமுழுக்கு நிகழ்த்து வித்தும்,
சிவனை உணர் சமுதாயப் பணிகள் செய்த
சிவஞான தேசிகர்தம் திருத்தாள் போற்றி. (20)

19. மாணிக்க வாசகர்

"சன்மார்க்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம் உணர்ந்து"
நன்மார்க்கம் சீடர்க்கு நாளும் நல்கி
நலமாரும் அபிராமி மலர்த்தாள் போற்றி,
முன்மார்க்கம் உறப்பேணித் திருக்கோயில்கள்
முற்றுபணி நிகழ்வித்துக் கொன்றை வேய்ந்த
மன்மார்க்கச் சித்தாந்த சைவம் பேணும்
மாணிக்க வாசகர்தம் மலர்த்தாள் போற்றி. (21)

20. சிவஞான தேசிகர்

"மன்னுசிவன் தனையடைந்து பெம்மா னாலே
மருவுபசு கரணங்கள் தம்மை மாற்றித்
துன்னியசாக் கிரமதனில் துரியா தீதம்
தோன்ற முயல் சிவானுபவமே" மேலிட்டோங்கப்
பன்னுமுறை பலவிரித்தும், திருவை யாற்றுப்
பஞ்சநதீச் சுரர்கோயிற் பணிமுடித்தும்,
நன்னெறிக்கு வரம்பாகி வீற்றிருந்த
சிவஞான தேசிகனார் நற்றாள் போற்றி. (22)

(தொடரும்)

சைவக் கிரியைகள்

வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ.
தருமபுரம்.

சைவக் கிரியைகள் சிவநெறி கடைப்பிடித்து வாழ்வோர் செய்யவேண்டியமந்திரம் பாவனைகளுடன்கூடிய சடங்குகளைக் குறிக்கும். அச்சடங்குகளை ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகையாகக் கூறலாம்.

ஆன்மார்த்தம் – தன்பொருட்டுச் செய்வது. பரார்த்தம் – பிறர்பொருட்டுச் செய்வது. பரார்த்தமாகச் செய்வன ஆலயம் எடுத்தல், திருக்குடமுழுக்காட்டுதல், நாள்வழிபாடுகள் புரிதல், சிறப்பு விழாக்கள் எடுத்தல் முதலியனவாகும். ஆன்மார்த்த மாகச் செய்யப் பெறுவனவற்றை நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்று வகையாகக் கூறலாம்.

நித்தியக்கிரியைகள், நாள்தோறும் செய்யப் பெறும் தியானம், அனுட்டானம், சிவபூசை, ஆலய வழிபாடு முதலியனவாகும்.

நைமித்தியக்கிரியைகள், சமய விசேட தீக்ஷைகள் செய்து கொள்ளுதல், ஆசாரியஅபிடேகம்செய்து கொள்ளல்போல்வன வாகும்.

காமியக்கிரியைகள் ஏதேனும் ஒருபயன் கருதி விரதம் இருத்தல், சாந்திகள் செய்துகொள்ளல் போல்வனவாகும்.

ஆன்மார்த்தக் கிரியைகளில் நைமித்திகக் கிரியைகளைச் சைவக்கிரியைகள் அல்லது சடங்குகள் என இக்கட்டுரையில் காண்போம்.

சைவக்கிரியைகள் பூர்வக்கிரியைகள், அபரக்கிரியைகள் என இருவகைப்படும்.

பூர்வக்கிரியை ஓர் உயிர் தாயின் கருவில் தங்கி உருப் பெற்று பூமியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் காலங்களில் செய்யப்பெறும் சடங்குகளைக் குறிக்கும்.

அபரக்கிரியை ஒருவர் இறந்தபின் அவர் தம்புதல்வர்களால் செய்யப்பெறும் நீர்க்கடன் முதலிய சடங்குகளைக் குறிக்கும்.

இக்கிரியைகள்பலவும் வருணாசிரமங்களுக்கு ஏற்ப வேதாகமங்களில் ஆங்காங்கே விதிக்கப்பெற்றுள்ளன. சைவக்கிரியைகளைச் சிவாசாரியார் பதினெண்மர் முறைப்படுத்தித் தொகுத்து நடைமுறைப்படுத்தற்கு ஏற்றவாறு வழக்குவடிவில் பத்ததிகள் என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர். அப்பத்ததிகள் பதினெண் பத்ததிகள் என்ற பெயருடன் சைவக்கிரியைகளுக்கு மூல நூல்களாக விளங்கி வருகின்றன.

பத்ததி என்ற சொல்லுக்கு வழிமுறைகளைக் கூறும் நூல் என்பது பொருளாகும்.

பதினெண் பத்ததிகளில் சோமசம்பு சிவாசாரியார் பத்ததியும் அகோர சிவாசாரியார் பத்ததியுமே பலராலும் நன்கறியப்படுவன. இவ்விரு பத்ததிகளுள்ளும் அகோர சிவாசாரியார் பத்ததியே விரிவுடையதாய் சைவாசாரியர்கள் பலராலும் பின்பற்றப்படுவதாய் விளங்கி வருகிறது. வடமொழியில் இலங்கும் அப்பத்ததியில் கூறப்படும் கிரியைகள் பலவற்றின் விளக்கங்களையாழ்ப்பாணம், காரை நகர், திரு. சி. சுப்பிரமணிய தேசிகர் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலின் அடிப்படையில் சைவக்கிரியைகளை முறையே காண்போம். இக்கிரியைகளில் பலவும் இந்நாளில் நடைமுறையில் இல்லையாயினும் நூலில் குறிக்கப்பட்டுள்ள வகையில் அவற்றை அறிவோம்.

பூர்வ அபரக்கிரியைகளாக விதிக்கப்பெறும் கர்மங்கள் பதினாறும். அவை:- கருப்பாதானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகருமம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், ஆக்னேயம், உபநயனம், பிரஜாபத்யம், சௌமியம், வைச்வதேவம், கோதானம், சம்வர்த்தனம், விவாகம், அந்தியகர்மம் ஆகியனவாம்.

பொதுவாகக்கிரியைகள் பலவற்றுக்கும் அங்கமாகமுதலில் செய்யப்படும் அனுக்ஞை, விநாயகர் பூசை, சங்கல்பம், புண்ணியாக வாசனம், பஞ்சகவ்யம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், நாந்திசிராத்தம், அக்னிமுகம், வாஸ்துசாந்தி ஆகியவற்றைக் காண்போம்.

அனுக்ஞை :

அனுமதிபெறல், எஜமான அனுக்ஞை எனவும் இதனைக் கூறுவர்.

கிரியைக்குரிய கர்த்தாவிற்காகவே ஆசாரியன் அக் கிரியையை அவன் சார்பில் செய்யவேண்டியிருத்தலின் அக் கர்த்தாவினுடைய அனுமதியைப் பெறுதலையே அனுக்ஞை எனக் கூறுகிறோம்.

விநாயகர் பூசை :

எந்தச் செயலைத் தொடங்கினாலும் விநாயகரை வழிபட்டுத் தொடங்கவேண்டும் என்பது நம் சமய மரபாதலின் மஞ்சள் அல்லது சந்தனத்தை விநாயகராகப் பிடித்து வைத்து அதில் அப்பெருமானை ஆவாகனம் செய்து தூபதீபம், நிவேதனம் கொடுத்து தோத்திரம் செய்து நாம் மேற்கொண்டசெயல் இடையூறின்றி இனிது நிகழப் பிரார்த்தனை செய்துகொள்ளல் விநாயகர் பூசை எனப்படும்.

சங்கல்பம் :

விநாயகர் வழிபாட்டுக்குப் பின்சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். இன்ன பயன் கருதி நான் இக்கிரியையைச் செய்கின்றேன் எனத்தெரிவிப்பது இதன் கருத்தாகும். வடமொழியில் கூறப்படும் சங்கற்பத்தின் தமிழாக்கமாக உள்ள இதனையே சங்கற்பமாகவும் ஓதலாம்.

'சம்புவாகிய சிவபெருமானது ஆணையால் இயங்கும் இவ்வுலகில், படைப்புக்கு முதல்வனாகிய பிரமனது ஆயுளின் பிற்பாதியில் சுவேதவராக கல்பத்தில் வைவஸ்வதமனுவந்திரத்தில் இருபத்தெட்டாவது கலியுகத்தின் முதற்பாதியில் சம்புத்தீவில் பாரதவருஷத்தில் பரதக்கண்டத்தில் மேருமலைக்குத் தென்பால் இன்ன இடத்தில் இன்ன சகாப்தத்தில் பிரபவமுதல் வழங்கப் பெறும் அறுபது வருடங்களில்............வருஷத்தில்............... மாதத்தில்..............அயனத்தில்..............ருதுவில்............... மாதத்தில்..............பக்ஷத்தில்.................வாரத்தில்............ திதியில்..............நக்ஷத்திரத்தில் குணவிசேடங்களை உடைய சுபதினத்தில்..............சித்திகளின் பொருட்டு இக்காரியத்தை ஆசாரியர் மூலமாகச் செய்விக்கிறேன்' எனச் சொல்லிக் கொண்டு தொடங்குவது சங்கல்பமாகும்.

புண்ணியாகவாசனம் : (தீர்த்தநீர் தெளித்தல்)

கிரியைக்குரிய பூசைப்பொருள்களைத் தூய்மைசெய்தற்கும், கிரியை செய்விப்போனின் தூய்மைக்குமாகச் செய்யப்

பெறுவது புண்ணியாகவாசனமாகும். அரிசிபரப்பில்மேடையில் ஒரு கும்பம் அமைத்து மாவிலை தேங்காய் ஆகியவற்றை அதன் மேல் வைத்து அக்கும்பத்தில் மும்மூர்த்திகளையும் நந்திமகா காளர்களையும் வருணனையும் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களையும் அக்கும்பத்தில் ஆவாகித்துப்பூசை செய்து மூல மந்திரத்தை 108 முறை ஓதிச் செபித்துப் பின் தருப்பைதுனியை மாவிலையுடன் கும்பத்தில் தோய்த்து மண்டபத்திலுள்ள பொருள்கள்மீதும்கர்த்தாவின் மேலும் தெளித்தல்புண்ணியாக வாசனமாகும்,

பஞ்சகவ்வியம் : (ஆனைந்து)

பஞ்சவ்ய பூசை :- பஞ்சகவ்யம் – பசுவிடம் பெறப்படும் ஐந்து பொருள்கள். ஆன்ம தத்துவம், வித்யா தத்தவம், சிவதத்துவம் ஆகியவற்றைத் தூய்மை செய்தற்கும், தீவினை களின் தீர்வுக்கும், அகாலமரண நீக்கத்துக்கும் செய்யப் பெறும் கிரியையாகும்.

எல்லாத் தெய்வங்களையும் தன்வடிவில் கொண்டதும் அறத்தின் வடிவமாய் விளங்குவதுமாகிய பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய ஐந்தையும் முறைப்படி அமைத்துப் பூசித்துக் கலந்து பஞ்சப் பிரமமந்திரங்களைச் செபித்து அபிடேகித்தற்கும் உட்பருகுவதற்குப் பயன் படுத்து வது பஞ்சகவ்யம் ஆகும்.

மிருத்சங்கிரகணம் :

தானியங்களை முளைக்கவைத்தற்கு எடுக்கப்படும் மண் மிருத்சங்கிரகணமாகும், ஆற்றங்கரை, தடாகக்கரை, நந்தவனம், தூயதானஇடம் ஆகியவற்றிலிருந்து முளையிடுதற்குத் தேவை யான மண்ணைச் சேகரித்தற்கு முதலிய விநாயகர் வழிபாடு செய்து புண்ணியாக வாசனத்தால் இடத்தைத் தூய்மைசெய்து பூமிதேவியை வழிபட்டு அனுமதி பெற்று வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று மண் வெட்டியால் மூன்று முறை தோண்டி மண்ணை எடுத்துப் பாத்திரத்தில் இட்டு அதனைத் துணியில் எடுத்துத் துணியால்மூடிக்கொண்டு மங்கலஒலியுடன் கிரியை நடக்குமிடத்திற்கு வரல்வேண்டும்.

(தொடரும்)

மணிக்கடலில் முகந்த - சில முத்துக்கள்

டாக்டர் திருமதி. ப. நீலா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 49. இதழ் 11. பக்கம் 532 இன் தொடர்ச்சி.)

பிரிவு படுத்தும் பாடு :

பொதுவாகவே அன்பில் நெகிழும் இயல்புடைய மகளிர், கணவனின் பிரிவில் சோக சித்திரங்களாகவே மாறிவிடுவர் என்பதைச் சிந்தாமணி கூறுகிறது.

சாமெனிற் சாதல் நோதல் தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைதலின்றிப் பொற்புடன் புலம்ப வைகி.

(சிந். 1598)

கம்பர் இதற்குப் பாத்திரமாகச் சீதை அமைந்துவிட்டாள் என்று காட்டும்போது தேவருக்குப் பின்னவராகிநிற்கிறார்.

ஆவி அந்துகில் புனைவதுஒன் றன்றி வேறுஇயாள்
தூவி அன்னம் மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்

(கம். 5079)

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றி மற்றுஅயல் ஒன்றும் செய்குவ தறியாள்

(கம். 5073)

பேரன்பு என்ற பெருநெருப்பு :

மகளிர் அன்புக்கு உருகுவதும் நைவதுவும் செய்வர். பிரிவைப் பொறுத்தாற்றும் வல்லமை அவர்களுக்கில்லை.

பொருள் வயின் பிரிவோர் உரவோர்
உரவோர் உரவோ ராயின்
மடவ மாக மடந்தை நாமே. (குறுந்.)

என்ற சங்க இலக்கியப் பாடலையொட்டியே பெண்மையியல்பு இன்றும் உள்ளது. சிந்தாமணி இதனைத் தெளிவாக்குகிறது.

பிரிவுற் றுற்பய னின்றியும் பாவைமார்
முரிவுற் றுர்களின் மூர்ச்சனை செய்பவாற்
பிரிவிற் றேன்றிய பேரன்பெ னப்படும்
எரியின் முழ்கியி றந்துபடுங் கொலோ. (சிந். 1627)

கம்பருக்கு தசரதன் மாண்டபின் அவனுடைய மனைவிமார்கள் அவனை வானில் தொடரத் துணிந்ததிலை சிந்தாமணிக்காட் சிக்கு உயிருட்ட உரங்கூட்டியது.

அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

என்ற குறள் உரையில் காளிங்கர் பாவம் செய்வதற்கும் அன்பு துணையாகிறதே என்று உரை கண்டார். கம்பர் காளிங்கருக்கு அரண் செய்து காட்டுகிறார்.

துஞ்சினனை தம்உயிரின் துணையைக் கண்டார் துணுக்கத்தால்
நஞ்சு நுகர்ந்தார் என உடலம் நடுங்கா நின்றுர் என்றுலும்
அஞ்சி அழுங்கி விழுந்திலரால் அன்பின் தறுகண்
பிறிதுண்டோ
வஞ்சம் இல்லா மனத்தானை வானில் தொடர்வான்
மனம்வலித்தார். (கம் 1909)

பேரன்பொடு பழகியவர்களைப் பிரிவது போன்ற கொடுமை பிறிதில்லை. அதைவிட எரியுள் முழ்குவது எளிது – என்று கண்டார்கள் – இது கம்பர் சித்திரம்.

கண்ணுல் பருகும் காதல் :

நீரைப் பருகி உடல் வெப்பத்தையும் வேட்கையையும் தணித்துக் கொள்ளலாம். காதல் வேட்கை கண்ணுல் பார்த்தா லொழியத் தீராது. நீர்பருகுவது போன்ற ஆர்வம் தீரா வேட்கை யாகிட கண்ணலேயே பருகினுன் என்று இலக்கியங்கள் கூறும். சிந்தாமணி கீழ்க்காணுமாறு இதனைத் தெரிவிக்கிறது.

வண்டு வாழ்பயில் கோதைம ணமுதற்
கண்ட-ஞான்றுதன் கண்ணெனுங் கைகளால்
நொண்டு கொண்டு பருகிய நோக்க மொன்(று)
உண்டெ னுவி யுருக்கி யிடுவதே. (சிந். 1630)

கம்பர் இக்கருத்தைத் தன் காவியத்தில் அமைத்துக் காட்டு கிருர். இராமனைப் பார்த்த சீதையும் சீதையைப் பார்த்த

இராமனும் இதயத்தை மாற்றிக் கொண்டனர். அவ்விடத்தில் கம்பர் பருகிய நோக்கு என இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் மங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர். (கம். 516)

அருவியெனவரும் அவலக் கண்ணீர் :

கண்களிலிருந்து கொட்டும் கண்ணீர் மார்பினை நனைப்பது இயற்கை. இலக்கிய ஆசிரியர்கள் அக்கண்ணீர் அருவியாகவே கொட்டியது என்றும் பின் இடையில் அதுதடமாகத்தேங்கியது என்றும் மிகுத்துச்சொல்வார்கள். தேவரின் கற்பனையும் இதனை யொட்டியே அமைகிறது.

கருகி வாடிய காமரு கோதைதன்
இருக ணீருமி டைமுலை பாய்ந்துகக்
குருகு பாய்தட மாகவ மூங்கொலோ. (சிந். 1629)

கம்பரும் அவலத்தின் உச்சம் இப்படித்தான் இருக்க முடியும் என்று எண்ணியிருப்பார்போலும்.

தழைத்த பொன்முலைத் தடம்கடந்து அருவிபோய்த்தாழ. (கம். 5074)

என அவலித்திருக்கும் சீதையைக் காட்டுகிறார்.

வெண்ணிலவா – வெள்ளிக்குடப்பாலா :

நிலவொளிக்குப் பலரும் பாலை உவமையாக்குவர். கருத்த மேகத்துக்கிடையிலும் – பெருத்த சோலைகளுக்கிடையிலும் பாலைக் கொட்டியதுபோல் நிலவொளி அமைந்தது என்கிறது சிந்தாமணி.

காழகச் சேற்றுள் தீம்பால் கதிர்மணிக் குடத்திலேந்தி
விழ்தரச் சொரிவதே போல். (சிந். 1541)

திங்கட்புத்தேள் சூழிருள் நீங்க நிலவொளி காட்டியது என்பது சிந்தாமணிச் செய்தி.

கம்பர் நிலா பாற்கடலை முகந்து பாரிடத்தில் கொட்டியது, அப்போது முகக்கப்பட்ட மீன்கள்தான் வானத்தில் துள்ளி

மிளிரும் நட்சத்திரங்கள் என்று இன்னும் அதற்கு அழகு கூட்டினர்.

தெரிந்து ஒளிர்திங்கள் வெண் குடத்தினுல்திரை
முரிந்து உயர் பாற்கடல் முகந்து முரிவான்
சொரிந்ததே ஆம்என துள்ளும் மீனெடும்
விரிந்தது வெண்நிலா மேலும் கீழுமே. (கம். 4889)

அருந்தவன் சுரபியே ஆதிவான் மிசை
விரிந்த பேர் உதயமா மடி வெண் திங்களா
வருந்தல்இல் பசுங் கதிர் வழங்குதாரையா
சொரிந்த பால் ஒத்தது நிலவின் தோற்றமே. (கம். 4890)

நிலவும் பாலும் நினைப்பிற்கு இனிமைகூட்டுகின்றன அல்லவா! காப்பியச் சுவைக்குக் கசப்பு ஏது?

(வளரும்)

மனமே! உனக்கு என்ன! ஆய்.

சிந்திக்க மனம் அமைத்து-செப்ப நா அமைத்து-நன்ருகப் படைத்துள்ளவனுக்கு - கைம்மாறு நாமாகத் தான் செய்ய வேண்டும். திருவடிகளை வணங்காத் தலைகள் போல பிறபொறிகளும் கொள்கையில்லாத போது (வாழ்த்தல் - கேட்டல் போன்ற செயல்கள்) பயனற்றவைகளே - என்பார் வள்ளுவர். வாழ்த்துவதற்கு வாயை - நினைக்க நெஞ்சை-தாழ்த்துவதற்குச் சென்னியையும் தந்தவனை மலர்கள் தூவி வழிபடுவது மானிட யாக்கையின் பயனாகும் என்பர் ஆன்ருேர். ஸ்ரீ குருஞான சம்பந்தரின் சிந்தனை இதனையொட்டி அமைகிறது. மனம் ஆசைப்படுகிறது. பாசங்களில் உழல்கிறது. மெய் வாய் கண் மூக்கு செவிகளைப் பெற்றிருக்கும் இவ்வுடலைக்கொண்டு சிவ பூசை செய்யவோ, திருமுறைகள் ஓதவோ, கோபம் விலக்கவோ - மனம் முயற்சி செய்யவில்லை. இக்கருவிகள் இருந்தும் செயல்படவில்லையே-மனமே! உனக்கென்ன? (வந்தது) ஆய்? என்று மனத்தைத் தூண்டிக் கேட்கிருர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

ஆசையருய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன ஆய்.

(ப. நீலா.)

கட்டுரை எண். 30.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

தருமபுரம்.

(மலர் 49. இதழ் 11. பக்கம் 526 இன் தொடர்ச்சி.)

உயிர், தான் கொண்டு வந்த பிராரத்த வினைகளை இப்பிறவியிலும், ஈட்டிக் கொள்ளும் வினையாகிய ஆகாமியத்தை, மூன்று இடங்களிலும் அனுபவிக்கும் என்பதைக் கண்டோம். இங்ஙனம், உயிர் உடம்பை விட்டுப் பிரிவதைக் கிரீடாப் பிரமவாதிகள் குடத்திற்குள் உள்ள ஆகாயம் (வெளி) மறைந்து அண்ட வெளியில் கலத்தலைப் போன்றது என்று கூறினர். இதற்கு உபநிடதங்களில் கூறப்பெறும் குடம் உடைந்த வழி, அதற்குள் இருந்த ஆகாயம் அதாவது வெளி, அண்டவெளியில் கலந்து விடுதலைச்சான்றுகாட்டினர். இது குறித்தவிளக்கத்தினை அடுத்த வெண்பாவில் மெய்கண்டார் கூறுகிறார்.

உபநிடதங்களின் உண்மைக் கருத்து :

கிரீடாப் பிரமவாதிகள், தம் கருத்திற்கு ஆகமஅளவையாக உபநிடதங்களைக் கொண்டனர். அதாவது குடத்திற்குள் இருக்கும்ஆகாயம், (அதுஉடைந்தபோது) பரஆகாயத்திற்குள் கலத்தலைப் போலவே உடம்பை விட்டுப் பிரிந்த உயிர் மீளப் பிறவாமல் இறைவனோடு கலந்து விடுகிறது என்று கூறினர். இது பொருந்தாது என்று கூறுகிறார் மெய்கண்டார்.

உபநிடதங்கள், குடஆகாயம், பரஆகாயம் என்பதை மட்டும் உயிர்பிரிவதற்கு உவமையாகக் கூறாமல் மேலும்மூன்று உவமைகளைக் கூறுகின்றன. 1. பாம்பு தன்னுடைய பழைய தோலை உரித்துக்கொண்டு புதியதொரு தோலோடு இயங்குதல் போலவும் 2. உயிரானது தான் வாழும் போதே நன வுடலை விட்டுக் கன வுடலில் செல்லுதல் போலவும் 3. யோகிகள் தம் உடம்பை விட்டுப் பிறிதொரு உடம்பில் சென்று புகுதல் போலவும் என மூன்று உவமைகளை அவ்வுபநிடதங்களே கூறுகின்றன. எனவே இவ்வுவமைகள் மூலமாக அவைகள்

சொல்லும் கருத்து, உயிர் உடம்பை விட்டுப் பிரிந்த பிறகும், மீண்டும் பிறிதொரு உடம்பில் சென்று புகும் என்பதாகும். இங்ஙனமிருக்க, குட ஆகாயம்-பர ஆகாயம் என்னும் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு கிரீடாப் பிரமவாதிகள் தங்கள் கருத்திற்கு உபநிடதங்களை மேற்கோள் காட்டுவது பொருந்து வது ஆகாது என்பது ஆசிரியர் கருத்து. இக்கருத்துக்களை,

அரவுதன் தோல்உரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும் — பரவில்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டம் என்ப(து)
அடாதுள்ளம் போமா றது.

என்னும் வெண்பா விளக்குகிறது. மெய்கண்டார் கிரீடாப் பிரமவாதிகள் எந்த உபநிடதங்களை மேற்கோள் காட்டித் தங்கள் கருத்தை நிறுவமுயற்சிக்கிறார்களோ, அந்த உபநிடதங் களை வைத்தே அவர்களை மறுத்துச் சைவ சித்தாந்தச்செந்நெறி யை நிறுவியிருக்கும் திறன் நினைந்து போற்றத்தக்கது. ஈண்டு குடஆகாயம், பரஆகாயம் என்னும் உவமானம், உயிர் சூக்கும உடம்பைவிட்டுப் பிரிதலுக்குக் காட்டப்படுவது. அந்நிலையில் மீளப்பிறப்பு இல்லை.

சத்தியும் சிவமும் :

இனி, சிவஞான போதத்தின் இரண்டாம் சூத்திரத்தின் நிறைவு அதிகரணமாகிய நான்காம் அதிகரணப் பொருளைச் சிந்திப்போம். இவ்வதிகரணம், சக்தி அதிகரணம் எனப்பெறும். உயிர்கள் பிறப்பு இறப்பாகிய போக்குவரவு புரிகிறதுஎன்பதும், அதற்குக் காரணம் இருவினைகள் என்பதும், அவ்விருவினை முதல்வன் ஆணையானே, உயிர்கட்குக் கூட்டப்பெறும் என்பதும், இதுவரை அறிந்த கருத்துக்களாம். கடைசியாக ஒரு கேள்வி எழுகிறது. முதல்வனின் வேறாக ஆணை என்பது ஒன்று கூறப்படுவதால் அவ்வாணையாகிய சக்தி என்பது, அம்முதல் வனின் வேறாக உள்ளதோ, ஒன்றாக இருப்பதோ, என்னும் ஐயம் எழுகிறது. இதற்குரிய விடையே இவ்வதிகரணமாகும்.

இவ்வையத்திற்கு மீமாஞ்சகர், பொருளது சக்தி, பொருட்கு வேறனதே என்றும், தார்க்கிகர் முதலியோர் பொருளையன்றிச் சக்தி என்பது வேறில்லை என்றும் விடை கூறுவர். இவைகளை மறுத்துச் சைவ சித்தாந்த சமயக் கருத்தினை மெய்கண்டார் வரும் வெண்பா மூலம் கூறுகிறார்.

இறைவன் ஒருவனே. அவன் செயல்படும் நிலையில் சக்தி எனப் பிரிந்துநிற்கிறான். எனவே சக்திஎன்பது சிவத்திடமிருந்து தோன்றும் செயல்பாடே தவிர, பிறிதொரு பொருளாகாது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், சூரியன் போன்றவன் இறைவன்; சூரியனின் கதிர்கள் போன்றது சக்தி. தாமரையை அணுகி மலரவைப்பது கதிர்கள் தாம். ஆனால் கதிர்கள் சூரியனின் வேறாகாதது ஆதலின், தாமரை, மலர்வ தற்குச் சூரியன்காரணம் என்கிறோம், அதுபோலவே, மண்ணில் நிகழும் மாற்றங்களுக்கும், விளையாடல்களுக்கும், இறைவனின் சக்தியே துணையாகிறது. எனினும், இறைவன்வேறு, சத்திவேறு அல்ல ஆதலின், அனைத்தும் இறைவனால் நடக்கின்றன என்கின்றோம். இக்கருத்தில்தான் முதல்வனின் ஆணையால், இருவினை உயிர்கட்குக் கூட்டப்படுகிறது என்றுஇவ்வதிகரணம் விளக்குகிறது.

ஒருமையும் இருமையும் :

இங்ஙனம் சிவமும், சக்தியும் விளங்குவதைத் தாதான்மியம் என்பர். தாதான்மியமாவது, பொருள் ஒன்றே யாயினும், தன்மையால் இரண்டாய்த் தோன்றும் ஒருவகைப் பிணைப்பு. பொருள் இரண்டாய் இருந்து பிரிப்பின்றி ஒன்றாய்த் தோன்றும் இணைப்பிற்கு அத்துவிதம் என்பது பெயர். அந்நிலை உயிரும், இறைவனும் முத்திநிலையில் உள்ள நிலை. எனவே, தாதான் மியத்திற்கும், அத்துவிதத்திற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். தாதான்மியத்தை "ஒருமையில் இருமை" என்றும், அத்துவிதத்தை "இருமையில் ஒருமை" என்றும் தமிழில் கூறுவர்.

உயிரும் இறைவனும் இரண்டற்ற நிலையில் இணைந்துள்ள அத்துவிதக்கருத்தை, இரண்டாம்நூற்பாவின் முதல்அதிகரணம் விளக்குகிறது. இறைவனும் சக்தியும் வேறு வேறு பொருள்கள் இல்லை என்னும் தாதான்மிய விளக்கத்தை இந்நூற்பாவின் கடைசி அதிகரணம் கூறுகிறது.

இறைவன் எல்லாப்பொருள்களிடத்தும் இயைந்துநிற்பர் என்பதால் அவன் ஒருமையுடையன் அல்லன் என்பதாகும். எனவே அவன் இருமையுடையவன் எனக்கொள்ளின், அவன் சர்வவியாபி என்பதுபொருந்தாது. எனவேஅவன் ஒருமையனா, இருமையனா என்றுவினாஎழுப்பின் எங்கும்உளனாகிய இறைவன் ஞாயிறும், அதன் ஒளியும்போல ஒருமை, இருமை என்னும் இரண்டற்கும் பொதுவான நிலையில் தாதான்மியம் என்னும்

தன்மையில் தானும் தன் சக்தியுமாக விளங்குகிருன். உயிர்களாகியநாம்அவனுக்குஎன்றும் அடிமைகளாக விளங்குகிரும் என்கிருர்.

ஈண்டு ஒருவிளக்கம் அவசியம் ஆகிறது. "ஒருமை இருமை என்னும் இரண்டற்கும் பொதுவான நிலையில்......" என்ருல் என்ன? என்பது அது. ஞாயிறு என்னும் ஒன்ருல்தான் நாம் எல்லாவற்றையும் காண்கின்ருேம். மேலும் ஞாயிறு என்னும் அப்பொருளையும் அதன் துணையுடன்தான் காண்கின்ருேம் எனவே பிறவற்றை விளக்குதல் - தன்னையேதான் விளக்குதல் என்னும்இருதன்மைகளை ஞாயிறுஉடையதாகிறது. இந்நிலையில் பிறபொருள்களை விளக்கும் பொழுது அது, " கதிர், ஒளி, வெயில், கிரணம்" என்று வழங்கப்படுகின்றது. தன்னையேதான் விளக்கும்பொழுது, "ஞாயிறு, கதிரோன், வெயிலவன்" என்று வழங்கப்படுகிறது. கதிர் என்று கூறப்படுவதும் கதிரோன்என்று கூறப்படுவதும் பொருளால் வேறு வேறு அல்ல ஆதலின் இரண்டாகாமையும், அவை இருக்கும் நிலையிலும் கொடுக்கும் பயனிலும் வேறுபடுதலின் ஒன்ருகாமையும் விளக்குதலால் அத்தன்மை, ஒருமை இருமை இரண்டற்கும் பொதுவாகின்றது. இத்தன்மையிலேயே சிவமும் சத்தியும் ஒருமை இருமை என்னும் இரண்டற்கும் பொதுவாகின்றது.

எங்ஙனம் எனில், இறைவனுக்கும், "பசுபாசங்களைப் பற்றி நின்று அவற்றைச் செயற்படுத்துதலும் அவ்வாறின்றித் தன்னையே தான் விளக்கி நிற்றலும்" என இருவகைநிலையுண்டு. இவற்றில் முதலில்கூறப்படுவது "சத்தி" எனவும், பின் கூறியது "சிவம்" எனவும் பெயரிட்டு வழங்கப் பெறுகின்றன. எனவே, "சத்தி" என்பது தடத்த நிலை என்பதும் "சிவம்" என்பது சொருப நிலை என்பதும் உணரவேண்டிய உண்மைகளாம்.

எங்கும் உளன் என்றள்வை ஒன்றன் றிரண்டென்னில்
எங்கு முளனன் றெவற்றெவனும்—அங்கண்
அவை அவ னன்றில்லைப் பொன்னொளி போல் ஈசன்;
அவை உடைமை; ஆளாம் நாம் அங்கு.

என்னும் வெண்பா மேற்காணும் கருத்துக்களை விளக்குகிறது.

(தொடரும்)

மண்டோதரி என்னும் - மாண்புறு நங்கை *

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

சமூகத் தாக்கம் :

தமிழ்க் கவிஞர்கள் பெண்மையைப் பெரிதும் போற்றும் இயல்பினர். இவ்வியல்பு சமூகத் தாக்கத்தால் விளைந்தது. சமூகம் பெண்மையைப் போற்றாதிருந்தால், கவிதைகளில் அது வெளிப்பட்டிருக்கும். தொல்காப்பியர் காலம் முதல், பாரதி காலம் வரை, தமிழ் இலக்கியச் சித்திரிப்புக்களில் பெண்மை, ஏற்றம் பெற்றே சிறந்திலங்குகின்றது.

" அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப "

என்ற தொல்காப்பிய நூற்பா, பெண்மையின் பெருமிதக் குணங்களைப் பதிவு செய்து காட்டுகின்றது. மணம் செய்து கொள்ளப்போகும் ஆடவனுக்கும், பெண்ணுக்கும் பத்துவகை ஒப்புமை வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். அவற்றுள் 'அறிவு' ஒப்பும் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

வள்ளுவத்தில் பெண்மை :

திருவள்ளுவர் பெண்மைக்குப்பேரிடம்தருகிறார். ஆடவனின் இல்லறத் துணையாகும் பெண், அவரால் பெரிதெடுத்துப் பாராட்டப் பெறுகிறாள். வாழ்வு என்னும் கடலைத் தனித்துக் கடக்க இயலாத ஆண்மகனுக்கு, அவள் துணை என்கிறார். கணவன் குடும்பப் பெருமையை, அவளே காக்க வல்லவள் என்பதைச், 'சொற்காத்து' என்று சுட்டிச் செல்கிறார். அவள் மட்டும் நன்கு அமைந்துவிட்டால், ஆடவன் வாழ்க்கையில் எல்லாம் நிறையும் என்பார்,

---

* 28—10—90 இரவு 9-30 மணிக்குத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலி பரப்பிய 'இலக்கியப் பேருரை' யின் கட்டுரை வடிவம். நன்றி: அகில இந்திய வானொலி நிலையம், திருச்சிராப்பள்ளி.

" இல்லதென், இல்லவள் மாண்பானல் "

என்று பேசி ஏற்றம் காட்டுவார். நிறைவாகப்,

" பெண்ணின் பெருந்தக்க யாவுள? "

என்று விஞத் தொடுத்து அணி சேர்ப்பார்.

பலதார மணத்தை வள்ளுவர் ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை. அதுகாலத்தின் தாக்கம் ஆகலாம். ஆனல், ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்ட பெண்ணை, ஏறெடுத்துப் பார்க்கும் ஆண்மையை, அவர் கடுமையாகச் சாடுகிருர். ஆண்மையிற் சிறந்த ஆண்மை, மாற்ருன் மனைவியை ஏறெடுத்துப்பார்க்காத மனப்பண்பில் மிளிர்வதை,

" பிறன்மனை நோக்காத பேராண்மை "

என்று புத்திலக்கணம் படைப்பார். மணம்கொள்ளாது, பெண், பொது மகளாக வாழ்வதை வள்ளுவர் கடுமையாகச் சாடுவார். பொதுமகளிர் உருவாதல் ஒழுக்கமற்ற ஆடவர்களால் தாம் என்பது அவர்கணிப்பு. பெண்ணை விலை மாதாகக் கருதும் சமூகம் 'நோயுடையது' என்பார். பொது மகளிரை 'வரைவின் மகளிர்' என்று இனங்காட்டி, சமூகம், அவ்வாருன வாழ்வி லிருந்து பெண்ணை, விடுவிக்க வேண்டும் என்று குறித் துரைப்பார். 'மனைவி' என்றபோர்வைக்குள் ஒளிந்து கொண்டு, சமூக அறங்களைச் செய்யத்தவறும் ஆடவனைக் கண்டித்தே, வள்ளுவரின் பெண்வழிச் சேறல் அமைந்தது.

சங்க இலக்கியங்களில் :

கற்பனை கலந்த சங்க - அக இலக்கியங்களில், பெண்மை யின் பெருமிதங்கள் தலைவி, தோழி, செவிலி என்ற பாத்திரங் களால் நிலைநாட்டப்படுகின்றன. அறத்தொடு நிலையலிலும், உடன்போக்கிலும், வரைவு கடாதலிலும் பெண்மையின் அறிவுத் திறம் ஒளிவீசக் காண்கிருேம்.

புற இலக்கியங்களில், பாடும் குயில்களாகப் பெண்பாற் புலவர்கள் வலம் வருகின்றனர். குலப் பெருமையும், மான வீரமும் மிக்க மற மகளிர்கள் அங்கே தீட்டப்பட்டுள்ளனர்.

காப்பியங்களில் :

தமிழின் முதற் காப்பியம் - ஒரு பெண்ணிடமிருந்து - அது கூடச் சரியில்லை; அவள் காற்சிலம்பிலிருந்து பிறக்கிறது. ஒரு குலமகள் தெய்வமாகிருள்; ஒரு அறியாப் பெண், ஆர்ப்பரித்து

எழுகிறாள்; அறிவார்ந்த வாதத்தால், நீதி கேட்டு நிமிர்ந்து நிற்கிறாள்; தெய்வம் எனக் கை கூப்பப் பெறுகிறாள். கணிகை குலமாதவி கற்பரசியாகிறாள்; கண்ணகியோடு ஒப்ப எண்ண மிடப் படுகிறாள். அவள் மகள், அறச்செல்வியாகி அகிலம் காக்கிறாள்.

" கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் "

என, அரசமாதேவி ஆவிதுறக்கிறாள்.

சைவத்தில் :

" பெண்ணின் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே "

என ஞானசம்பந்தர் நடமுறைப் பேசுகிறார்.

" பேயார்க்கும் அடியேன் "

என்று, சுந்தரர் அம்மையாரை 'ஆர்', விகுதி தந்து வணங்கு கின்றார். 'அள்', 'ஆள்' என்றவிகுதியேபெய்யாமல்,பெண்மைத் தொண்டர்களை முடிக்கும் போதெல்லாம், 'அர்' என்றும், 'ஆர்' என்றும் உயர்திணைப் பலர்பால் விகுதியே தந்து சேக்கிழார் பெண்மையைச் சிறப்பிக்கிறார். தீமையுடைய பெண்பாற் பாத்திரம் ஒன்றுகூட இல்லாது, கதை நடத்திச் சேக்கிழார் கருத்துள் நிறைகிறார்.

சற்று நீண்ட முன்னுரைதான்; தேவையான முன்னுரையும் கூட.

தமிழர் வாழ்விலும், வாக்கிலும் பெண்மை பெருமிதம் கொண்டிருந்த வரலாற்று அறிமுகத்திற்காக, இந்த முன்னுரை தேவையாகி விடுகிறது.

மண் விளைத்த மரபு :

பிறமொழிக் காப்பியம் தமிழுக்கு வந்தபோது, அவற்றைத் தமிழில் தரவந்த தமிழ்க் கவிஞர்களுக்குப் பெண்மை பற்றிய இந்தச் சித்தாந்தம் அரணாய் நிற்கிறது. இராமகாதையும், பாரதமும், பெருங்கதையும், சிந்தாமணியும் தமிழில் எழுந்த போது, பெண்மை பற்றிய சித்திரிப்புக்களில், கவிஞர்கள் மண்ணின் மரபைப் போற்ற வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டனர். காவியப் போக்கில், முரண்பாடுடைய-முறைதவறிய மற்றும் சீர்மை திறம்பிய மகளிர்கள் மூலக்கதை

களில் வருகின்றனர். அவர்களைத் தமிழ்ப்படுத்தும்போது தமிழ் இலக்கிய ஆடவர்சால்பும், மகளிர் திறமும், மாசுபடாவண்ணம் அவர்களைப் படைக்கத் தமிழ்க் கவிஞர்கள் உறுதி பூண வேண்டியுள்ளது. தீய மகளிர்கள் கூட - நல்லவர்களாக, இயன்றவரை உயர்ந்தவர்களாகப் படைத்துக் காட்டப்படுவதற்கு, இந்த மண்ணின் கவிஞர்கள் போற்றிய மரபே பாதுகாவல் செய்கிறது.

தனிமனிதப் பண்பு :

வான்மீகத்துச் சூர்ப்பணகையும், தாரையும், உருமையும், கைகேயியும், மண்டோதரியும் கம்பனின் கைவண்ணத்தில் எவ்வளவு உயர்ந்துள்ளனர், அல்லது உயர்த்தப்பட்டுள்ளனர் என்பதை ஒப்பிட்டுப்பார்ப்பவரே உணர இயலும். கவிஞனின், தனிமனிதப் பண்பாடும் இணையும்போது இச்சித்திரிப்புக்கள் மேலும் அழகாகின்றன.

மானுடத்திற்கும் மேம்பட்டவன் :

தீமையையே - தீமை களைந்து - நன்மையாகச் சித்திரிக்க வல்ல பண்பாடுமிக்க தமிழ்க் கவிஞர்கள் கையில், ஒரு நன்மை கிடைத்துவிட்டால், அதை அவர்கள் எந்த அளவுக்கு ஒளியூட்டுவார்கள் என்பதைஎடுத்துக்காட்டுவதற்கு ஒருசான்றாகத் திகழ்கிறாள் மயன் மகள் மண்டோதரி.

கவிஞன் ஒரு தாய் போன்றவன். தேறும் என்று அவள் எதிர்பார்த்த பிள்ளை, தேறிவிட்டால் அவள் மகிழ்வதைவிட, தேறாது என்று நினைத்த பிள்ளை தேறும்போது, அவள் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. தீமையின் ஊடே நன்மையையும், மறத்தின் ஊடே அறத்தினையும் காணும்போது மகிழ்வது மானுட இயல்பு. கவிஞன் மானுடத்திற்கும் மேம்பட்டவன். அதனைப் பாடிப் படைத்துச் சாகாவரம் தருபவன்.

இருள் சூழ்ந்த இலங்கையில் வீடணனும், திரிசடையும், மண்டோதரியும் கண்ணில் படும்போது, அவன் கவிதை உள்ளம் கர்வம் கொள்ளுகிறது. கம்பனின் கைவண்ணத்தில், இராவணன் மனைவி மண்டோதரி மறக்க வொண்ணா. கற்பரசியாக கவினுர் நங்கையாகப் பேருருக்கொள்கிறாள்.

(தொடரும்)

அருட் செல்வம்

திரு. சொ. சிவதாணு
வடசேரி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

" நன்றே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கேபரம்; எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே! "

என்று பட்டர் பாடுவது காண்க. ஆகவே அவள் கடல் எனத் திகழ்கின்றாள். கடலின் ஆழம், வற்றாத தன்மை, எல்லையற்ற தன்மை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. கருணையின் ஆழம் உணர்த்தவே கடல் உணர்த்தப்பட்டது. கடல்போல வற்றாத கருணையும் அதன் எல்லையற்ற ஆழம் காணமுடியாத போக்கும் இங்கு வருவித்து உணர்த்தப் படுகின்றது.

" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவில்லை "

என்றார் ஞானசம்பந்தப் பெருமான். அருட்கடலின் எண்ணம் எப்போதும் இருக்கவேண்டும். அதுதான் நல்ல கதியைத்தரும்.

" அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ? எண் தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய்! பிழைசெய்வாய்! நானோ இதற்கு
நாயகமே? "

என்றார் மணிவாசகர். எனவே மெய்ப்பொருளையும். பொய்ப் பொருளையும் பாகுபடுத்தி எப்பொழுதும் விசாரம் பண்ணி வர வேண்டும். பகவான் ஒருவரே மெய். பகவானே சனாதனமான

சத்பொருள் என்று இராமகிருஷ்ணர் முதல் எல்லா மகான்களும் சொல்லியுள்ளனர். ஏனைய யாவும் பொய்யே. அதாவது அவை நிலையற்றவை. நிலையான பொருள் எதுவோ அதுவே மெய்ப் பொருளாக முடியும். மற்ற பொருள் நிலையற்றதாயிருந்தாலும் ஆண்டவன் என்ற சக்தி மட்டும் மெய்ப்பொருள்தான். அவரை மெய்ப்பொருள் என்றே அறிஞர் சுட்டுகின்றனர். அப்பர், அம்மெய்ப்பொருளை,

" வேதநாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே "

என்று பாடிப்பரவினர். சீவன் முத்தர் சிவனே என்றிருப்பர்.

" தானல்லா தத்தனையுந் தானென் றுழலாமல்
தானெல்லா மாயதனுள் தாக்காமல் — தானெல்லாம்
ஆனேம் எனும் போதந் தாக்காமல் ஈசனிடத்து
ஆனேனே ஆயினவனும் "

என்பது சிவபோகசாரம். ஆன்மானந்தமே குறியாயிருக்க வேண்டும். அது சிவன் ஆன்மாவிற்கு வழங்கும் ஆனந்தம். ஆன்மானந்தத்திலும் சிவயோகம் என்றும் சிவபோகம் என்றும் இரண்டு உண்டு. உயிர்தான் சேர வேண்டிய பொருள் இறை. உயிர் தன் வினை மாசு நீங்க இன்ப துன்பங்களைத் துய்த்துத் தொலைத்தல் வேண்டும். அதற்கேற்ப உயிரை மறைப்பித்து நிற்பது திரோத மலம். உயிர் முடிந்த பயனாக அடையத்தக்கது இறைவனே. திருவருள் துணை அல்லது அருட்செல்வம் இதற்கு வேண்டும். அருட்செல்வம் நிறைந்தால் சிவயோகமும் சிவ போகமும் வாய்க்கும். எப்பொருளைக் காண்கினும் அவற்றின் மெய்ப்பொருள் சிவமேஎன்றுணர்ந்து அதனோடு ஒன்றுபடுதல் சிவயோகம். உயிர் தன் செயலற்றுத் தான் என்று சொல்லப் படுகின்ற யான், எனது என்னும் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கி நின்றால் அப்போது இறையருள் அதனைத் தானாக்கி விடும். அதுவே சிவபோகமாகும்.

கொடுப்பான் சிவனே! கொள்வானே ஆன்மா! புசிப்போம் சிவபோகம்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரமோதூத ஐப்பசித்திங்கள் – ஆயில்யநாள் ஆலயவழிபாடு 13—10—90 சனிக்கிழமையன்று குண்டையூர், கீழையில், ஈசனூர் என்ற தலங்களில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வர், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கி வரும் திருவிளையாடற்புராண அருளுரை 4—11—90 ஞாயிற்றுக் கிழமை மாலை திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடை பெற்றது.

இறைவன் கால்மாறி ஆடியது உயிர்கள் உய்யவேண்டும் என்பதற்காக என்றும் ஆசைநீத்தவர்களுக்குத்தான் மோட்சம் என்றும் இறைப்பற்றோடு அறம் செய்தால்தான் அறத்துக்குப் பயன் என்றும் மனங்கொள விளக்கியருளினர்கள். ஆதீன அடியார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அன்பர்கள்கேட்டுப் பயன்பெற்றனர். அடுத்த அருளுபதேசம் 2—12—90 ஞாயிறு அன்று காலை நடைபெறும்.

திருப்பனந்தாளில் திருமுறை வேள்வி

தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில் மாதந்தோறும் திருவாதிரைத்திருநாளில் நிகழ்ந்துவரும் திருமுறை வேள்வி விழா (பன்னிரு திருமுறை முற்றோதல்) 10—10—90 புதன்கிழமை திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் ஆலயத்தில் 10ஆம் திருமுறை திருமந்திரம் 4, 5, 6 தந்திரங்களின் முற்றோதலாக நிகழ்ந்தது.

காலை 9-00 மணி அளவில் திருமுறை ஓதும் அன்பர்கள் ஸ்ரீ காசிமடம் சென்று ஸ்ரீ சொக்கநாதர் பூசையையும், ஸ்ரீ காசி விநாயகரையும் வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளைத் தரிசித்துக்கொண்டு திருக்கோயிலைஅடைந்து அருள்மிகு பிரகந் நாயகியம்மையையும் அருள்மிகு செஞ்சடையப்பரையும் வழி பட்டுத் திருமுறை வேள்வியைத் தொடங்கினர்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் முற்றோதலைத் தொடங்கி வைத்தருளினார்கள். மாலை 7-00மணி அளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிவழிபாடாற்றி னார்கள். ஸ்ரீ பிரகந்நாயகி அம்பாள்சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தியருளினார்கள். திருமந்திர முற்றோதலை நிறைவுசெய்து அருளாசி வழங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை ஸ்ரீ காசிமடத்திற்கு எழுந்தருளச் செய்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வழிபாடாற்றி அருளாசி பெற்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் திருமுறையில் கலந்துகொண்ட அன்பர்களுக்கு இரண்டு வேளை களிலும் உணவு வழங்கப்பெற்றது. திருமுறை வேள்வியில் உள்ளூர் அன்பர்களும், ஸ்ரீ காசிமடம் கலைக் கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

சைவ சித்தாந்தக் கல்லூரி சான்றிதழ் வழங்கும் விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவ சித்தாந்த மாலைநேரக் கல்லூரி திருச்சிராப்பள்ளி மையத்தின் பட்டச்சான்றிதழ் வழங்கும் விழா 13—10—90 சனிக்கிழமை மாலை 6-00 மணி அளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சைவ சித்தாந்தப் புலவர் திரு. சா. குருமார்க்கண்டன் அவர்கள் திருமுறை பண்ணிசைக்க, மையப்பொறுப்பாளர் புலவர் திரு. மு. வைத்தியநாதன் அனைவரையும் வரவேற்றார்.

மலைக்கோட்டை ஸ்ரீ மௌனமடம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் பேராசிரியர் வீ. நாகராசன் அவர்களும் வாழ்த்துரைவழங்கினர்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., பிஎச். டி., அவர்கள் சித்தாந்தக் கல்லூரி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பேருரை நிகழ்த்தினார்கள்.

சிவநெறிச் சீலர்களும் அன்பர்களும் விழாவில் கலந்து கொண்டனர். பேராசிரியர் திரு. சு. பாலகிருஷ்ணன் நன்றி தெரிவித்துப் பேசினர்கள். விழா இனிதே நிறைவேறியது.

ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜைவிழா பிரமோதூத ஆண்டு புரட்டாசித்திங்கள் பூர நாளில் 29 ஆம் நாள் 15—10—90 திங்கட்கிழமை யன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்திருவுளப்பாங்கின்வண்ணம் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலுக்குக் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு ஆற்றினர்கள்.

தருமையில் :

மாலை 7-00 மணியளவில் ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர், புலவர் திரு. கே. கணபதி, எம். ஏ., பி. எட்., ஸ்ரீ அருணந்திதேவர் அருள்வரலாறு பற்றியும், புலவர் திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., அவர்கள் ஸ்ரீ அருணந்திதேவர் அருள்நூல்கள் பற்றியும் உரையாற்றினர்.

சிதம்பரத்தில் :

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீ சந்தானசாரியர்சந்நதியில் விரிவுரைநிகழ்ச்சிநடைபெற்றது. திருமுறைக் கலாநிதி சிதம்பரம் திரு. எம். கனகசபைப் பிள்ளை திருமுறை பண்ணிசை நிகழ்த்தினர். பிர்ம்மஸ்ரீ டாக்டர் ஐ. ஆனந்த நடராஜ தீக்ஷிதர் தலைமை தாங்கினர். அண்ணமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர்திரு. சு. சுவாமிஜயா ஸ்ரீ அருணந்தி தேவர் வரலாறும் நூல்களும் என்ற தலைப்பில் உரையாற்றினர். அன்பர்கள் குருவழிபாடு ஆற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

கந்தசஷ்டி விழா

தருமை ஆதீனத்தில் :

ஸ்ரீ முருகப்பெருமானுக்குரிய திருநாட்களுள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் கந்தசஷ்டி விழா 19—10—90

வெள்ளிக்கிழமை முதல் 25—10—90 வியாழக்கிழமை வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தருமை ஆதீனத்தில் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வழிபாட்டுடன் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினர்கள். மாலை 7 மணி அளவில் தருமை ஆதீனக் கலைக் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி. ப. நிலா, எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி., ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜைமடத்தில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர். ஆதீனஅடியார்களும், அலுவலர்களும், அன்பர்களும் வழிபாடு ஆற்றியும் விரிவுரை கேட்டும் பயன்பெற்றனர்.

ஆதீன தேவஸ்தானங்களில் :

தருமைஆதீனத்திற்குச்சொந்தமான சீகாழி, வைத்தீசுவரன் கோயில், திருக்கடவூர், திருப்பனந்தாள், திருபுவனம், திருவையாறு, மயிலாடுதுறை குமரக்கட்டளை, பேரளம் முதலிய தலங்களில் ஸ்ரீமுருகப்பெருமானுக்குச்சிறப்பு வழிபாடும்கந்தபுராண விரிவுரையும் நிகழ்த்துவிக்கப்பெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் புலவர் திரு. கே. கணபதி, எம். ஏ., பி. எட்., வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. மு. முருகையா தேசிகர், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் திரு. தி. மணிசண்முகம், எம். ஏ., எம். எட்., திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர் திரு. இரா. மருதநாயகம், எம். ஏ. எம்.ஃபில்., திருபுவனம் ஸ்ரீகம்பகரேசுவரசுவாமிதேவஸ்தானத்தில் புலவர் திரு. க. இராமகிருஷ்ணன் எம். ஏ., எம். எட்., திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சிவாகமப்ரவீண திரு. ப. கணேசன், மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் திரு. தெ. இராஜாமணி, எம்.ஏ., பிஎஸ்.சி., எம்.எட்., பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் திரு. பா. சிவநேசன், எம். ஏ., எம். ஃபில்., ஆகியோர் உரையாற்றினர். வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் திருவீதியுலாக் காட்சியும் நடைபெற்றன. அன்பர்கள் சுவாமி தரிசனம்செய்தும் சொற்பொழிவைக்கேட்டும் பயன்பெற்றனர்.

தருமையில் திருமுறை வேள்வி

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரைத் திருநாளில் 10ஆம்திருமுறையில்7ஆம்தந்திரம்முற்றோதல்திருமுறைவேள்வி நிகழ்ச்சி 7—11—90 புதனன்று தருமை ஆதீனம் அருளாட்சிக் குட்பட்ட தருமபுரம் ஸ்ரீ அபயாம்பாள் உடனுகிய ஸ்ரீ தருமபுரீ சுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்தது.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகபரமாசாரியசுவாமிகள் அவர்கள் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள். காலையில் 9 மணிக்குத் தொடங்கிய வேள்வி 11 மணியளவில் நிறைவு பெற்றது.

10 ஆம் திருமுறையில் 8 ஆம் தந்திரம் முற்றோதல் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர்திருக்கோயிலில் 11 மணியளவில் தொடங்கி 1 மணியளவில் நிறைவுபெற்றது.

10 ஆம் திருமுறையில் 9 ஆம் தந்திரம் முற்றோதல் ஸ்ரீசொக்கநாதர்பூஜைமடத்தில் பிற்பகலில் தொடங்கி மாலையில் நிறைவு பெற்றது. தருமைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, திருமுறை முற்றோதலை நிறைவுசெய்துஅருளாசிவழங்கினுர்கள். காஞ்சிபுரம்தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீல ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் விழாவில் கலந்து கொண்டார்கள். உள்ளூர் அன்பர்களும் மயிலாடுதுறை, சீகாழி நகரப் பிரமுகர்களும் பொதுமக்களும் விழாவில் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றுய்ந்தனர்.

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜை

தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தரின் ஞான ஆசாரியராக விளங்கியவர் கமலை ஸ்ரீ ஞானப் பிரகாசர். சிறந்தஞானசாரியரும், நூலாசிரியரும்ஆகியஇவர்கள் முத்திப்பேறு எய்தியநாள் ஐப்பசி – தேய்பிறை – சஷ்டி ஆகும். இவர்களின் குருபூஜைவிழா தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் பிரமோதூத ஆண்டு ஐப்பசித்திங்கள் 22 ஆம் நாள் (8—11—90) வியாழக் கிழமை யன்று திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயி லிலும் திருவாரூர்ப் பூங்கோயில் திருச்சுற்றில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தீச்சரத்திலும் காலையில் விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் சிறப்பாக நடைபெற்றது.

திருமுறைக் கலாநிதி திரு. திருஞானசம்பந்த தேசிகர் திருமுறைக்கலாநிதி திரு. கல்யாணசுந்தர தேசிகர் ஆகியோரின் திருமுறை சிவபோகசாரம் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் அருள்நூல்கள் பற்றிக் கருத்தரங்கம் நடைபெற்றது. நண்பகல் தருமை ஆதீனம் இராஜன்கட்டளைத் திருமடத்தில் மாகேசுவர பூஜை நடைபெற்றது.

காலை ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனை நடைபெற்றது. அன்பர்கள் சொற்பொழிவைக் கேட்டும் வழிபாட்டைக் கண்டும் பயன் பெற்றனர்.

தருமபுரத்தில் குடமுழுக்குப் பெருவிழா

தருமபுரம் மேலை வீதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம் மற்றும் ஆனந்த பரவசர் பூங்காவில் அமைந்துள்ள தருமைஆதீனம் 2ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள், 19 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், 24 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள், 25 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் ஆகியோரது குருமூர்த்த ஆலயங்களின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், தருமை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளின் ஞானாசாரியராகிய ஸ்ரீகமலை ஞானப்பிரகாச தேசிகமூர்த்திகளின் குருபூஜை நன்னாளாகிய 8–11–90 வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் கலந்து கொண்டார்கள்.

காலை 10-30 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவசர் சந்நிதியில் உரையரங்கம் நடைபெற்றது. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் விநாயகர் வழிபாடு பற்றியும் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் மேலைக் குருமூர்த்த ஆலயங்கள் பற்றியும் உரையாற்றினர்.

மாலை 6-30 மணியளவில் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் திருமந்திரத்தில் குருவழிபாடு பற்றியும் டாக்டர் திருமதி. ப. நீலா அவர்கள் பெரியபுராணத்தில் குருவழிபாடுபற்றி யும் உரையாற்றினர். இரவு 9-00மணிக்கு மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் "பார்வதி திருமணம்" என்ற தலைப்பில் பொம்மலாட்டம் நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்
பத்தொன்பதாம் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 19 ஆம் ஆண்டுக் குருபூஜை விழா 9—11—90 வெள்ளிக்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளை களிலும் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள்.

நண்பகல் மாகேசுவர பூஜை நடைபெற்றது. மாலையில் குருமூர்த்த ஆலயத்தில் திருமுறை இசையரங்கிற்குப் பிறகு பெரியபுராணத்தில் முதன்மை பெறுவது குருவழிபாடா, இலிங்க வழிபாடா, சங்கம வழிபாடா என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. இதனைக் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தொடங்கி வைத்தருளினர்கள். டாக்டர் திரு. சொ. சிங்கார வேலன் நடுவராக இருந்து நடத்தினர்கள். "குருவழிபாடே" என்ற தலைப்பில் திருமதி. ப. நீலா, திரு. இரா. மருதநாயகம், திரு.ப.திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர். 'இலிங்கவழிபாடே' என்றதலைப்பில் திரு.மு. சிவச்சந்திரன், திரு.ஆ. செந்தில்நாதன், திரு. ப. சிவநேசன் ஆகியோர் பேசினர். "சங்கம வழிபாடே" என்றதலைப்பில் திரு. இரா. செல்வக்கணபதி, திரு. சா. கிருஷ்ண மூர்த்தி, திரு. நா. ஞானசேகரன் ஆகியோர் பேசினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நிறைவில்அருளாசி வழங்கினர்கள். குரு, லிங்க, சங்கம வழிபாட்டில் முதன்மை யானது எது? என்னும் கேள்விக்கு விடை "லிங்க வழிபாடே" என்று அருளினர்கள். முத்தமிழில் சிறந்தது எது எனில் இயல்

தமிழ் என்பதுபோல இதனைக் கொள்ளலாம் என்றும் இயல் தமிழ் ஆகியகருத்தினை விளக்குவதற்கு இசைத்தமிழும்நாடகத் தமிழும் இரு துணைக்கருவிகளே தவிர முதன்மை ஆகா என்றும் அதுபோலவே லிங்கவழிபாடாகிய சிவவழிபாட்டிற்கும் சிவனின் அருளைப் பெறுதற்கும் துணையாக விளங்குவனவே குருவழிபாடும் சங்கம வழிபாடும் ஆதலின் இவை இரண்டும் முதன்மை ஆகா என்றும் அருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளைச் சார்பில்

ஸ்ரீ காசியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப் பேறு எய்திய ஸ்ரீகாசி குமாரசாமி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமணியின் திருவுருவப்படத் திற்குச்சிறப்புவழிபாடும் ஸ்ரீவிசாலாட்சிஅம்மை ஸ்ரீவிசுவநாதர் ஸ்ரீ அன்னபூரணி ஸ்ரீகேதாரநாதர் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாகேசுவரபூசையும் சாதுக்களுக்கு பண்டாராவும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னையில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் இறுதியாக வழிபாடாற்றிய சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலிசுவரர் திருக்கோயில்வழிபாடும் சமயப்பிரசார நிலையத்தில் நினைவுச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

கடிதம்

என். ராமகிருஷ்ணா — மயிலாடுதுறை
11—10—90.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளுக்கு அநேக நமஸ்காரம். தினமலர் தீபாவளி மலரில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தியின் வண்ணப் படமும் ஒரு சிறு கட்டுரையும் பிரசுரமாகி உள்ளன என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஞானபூமியில் குருமகாசந்நிதானம் அவர்களின் பேட்டிக்கட்டுரையையும் வண்ணப்படங்களையும் பார்த்தேன். அர்த்தநாரி பற்றிய விளக்கம் சிறப்பாக உள்ளது.

எதிர்காலம்

ஜோதிஷம்
திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

பிரமோதூதஞு கார்த்திகைமீ 1௳ முதல் 29௳ முடிய (17—11—90 முதல் 15—12—90 முடிய)

பிரமோதூதஞு ஐப்பசி மாதம் 30௳ சுக்கிரவாரம் விசாக நக்ஷத்திரம் சதுஷ்பாத கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 35 நாழிகை 55 விநாடிக்கு மிதுனலக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் துலா ராசியிலிருந்து விருச்சிக ராசி சங்கிரமணமாக கார்த்திகைமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். மறுதினம் முதல் தேதி ஸ்திரவாரம் முடவன் முழுக்கு விசேஷம். சங்கிரமணகால கிரக ஸ்திதியின்பலனாவது சர்வேஸ்வரன் கிருபையில் நாடுகளில் பிரஜைகள்தம் சமயவழி நெறிமுறையில் உத்தமசீலர்களாகவும் தியாகவான்களாகவும் திகழ்வார்கள். மாந்தர்களின் அறியாமை துர்கன்மங்கள் நீங்கும் பொருட்டு ஆன்றோர்களால் பரம உள்ளத்தில் பிரசாரம் பொதுநல நற்சேவைகள் நடந்து கொண்டிருக்கும். தேசங்களில் ஆங்காங்கு தர்மஸ்தாபனங்களில் சிவதர்மங்கள் சிவநேய செல்வர்களால் சிவபுண்ணியங்கள் தெய்வ சம்ரோக்ஷணங்கள் வெகுவாக நடந்து வரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவசமய பரிபாலன கர்த்தாக்களாகவந்து திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் கயிலைமாமுனிவர் ஆகியவர்கள் லோகத்திற்கு இறைவன் மகத்துவம் திருவிளையாடல் தம் திருவாய் மலர்ந்து விமர்சித்தும் வேதம் சாஸ்திரம் ஞானநூல்கள் வெளியீடு செய்தும் அருளிச் செய்வார்கள். பக்த கோடிகள் சிஷ்ய கோடிகள் தம்வழிபற்றுகின்ற தம்பிரான் சுவாமிகள் எல்லோருக்கும் ஈஸ்வர மகா பிரசாதம் வழங்கி ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் க்ஷேத்திர ஐதிகங்களின்படி உற்சவங்கள் விமரிசையாக நடைபெறும். பிரஜைகள் அனைவரும் மூர்த்திதரிசனம் மகாமூலதரிசனம் செய்து ஈஸ்வரபக்திமேலிட்டு ஆனந்தபரவசமாவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் மூன்றுவகையில் வந்து சேரும். அரசு கண்யத்தில்

உறுதி வாக்களித்தலில் தக்க செலவினமும் ஏற்கும். நவம்பர் 26க்குள் அரசாங்கத்திலிருந்து தபால் வந்து தொழில் துறையில் நல்ல ஏற்பாடுகளைச் செய்யும். தெய்வ பக்தி விரதங்கள் அனுஷ்டானங்களில் மனம் செம்மையாகும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கியபலன் தரும். நவம்பர் 18, 19 டிசம்பர் 15 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம்:- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும் அரசகண்யத்தில்நல்லவிதசெலவினையும் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ நன்மைகளை ஏற்படுத்தும். இராஜபிரமுகர்களின் நேசம் தரும். பொதுநல நற்பணிகளை ஏற்கச் செய்யும். நவம்பர் 26 தேதிக்கு மேல் அரசாங்க லிகிதத்தில் மகிழ்ச்சியும் நன்மையும் ஏற்படும். புத்திரருக்கு உயர்வளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் நல்லவகையில் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நற்புகழ் ஏற்படும். செய்தொழில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மைகளையும் பிரச்சினைகளில் நல்லதீர்வும் ஏற்படுத்தும். வீடுவாகன பிராப்தியில் நாகரிக அமைப்பு பொருந்தும். தெய்வபக்தி மிகும். ஆசார அனுஷ்டானங்கள் பேணும். புத்திரருக்கு அரசு நன்மை உயர்ஸ்திதியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஓர் பெண் மகவு ஏற்படும். நவம்பர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் நற்பலன் ஏற்படுத்தும். பணவருமானம் நல்லவகையில் வரவாகிக் கொண்டிருக்கும். செந்நெல் பிராப்தி மிகுந்துவரும். நவம்பர் 27 தேதிக்குமேல் கலைஞானங்களில் சாஸ்திர ஆராய்ச்சிகளில் தெளிந்த உயர் சிந்தனையை உண்டு பண்ணும். திட்டமிட்ட எல்லாக் காரியங்களையும் சிறப்பாக நடத்தும். இயந்திர சாதனங்களில் நற்பலனை ஏற்படுத்தும். புத்திரருக்கு உற்றவருக்கு நல்லன செய்விக்கும். தாம்பத்தியவாழ்க்கை, வைதீகம், ஆசாரத்தில்மிளிரும். நவம்பர் 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அரசகண்யத்தில் வரவாகிக்கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ நன்மைகள் வெகுமதி வருதல் ஆகும். சுபகாரியங்களை ஏற்றுநடத்துதல் பந்துக்கள் வருகைஉபசரணை நடக்கும். பிரபலஸ்தர்களின் நேசம் தரும். எல்லா பொதுநல காரியங்களையும் வெற்றியாக நடத்தச் செய்யவும் ஓர் நவீன பொருள்வாங்குதல், வீடுவாகன பிராப்தியில் நல்லனஏற்படுதல் ஆகும். புத்திரருக்கு பணிமாற்றம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். பண வருமானம் மூன்று வகையில் வரும். பூஷணங்களின் பிராப்தி யளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தி யோகத்தில் நவம்பர் 26 தேதியில் விசேஷ நன்மையை ஏற்படுத்தும். அரசாங்கத்திலிருந்து ஆதாரமான செய்தி வந்து சேரும், தெய்வபக்தி மிகும், ஆசார அனுஷ்டானம் பேணும். அமைதி மனநிலையைத் தரும். உயர் அந்தஸ்து அளிக்கும். ஓர் இயந்திரசாதனம்அனுபோகபிராப்தியாகும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறை யில் சிறப்பளிக்கும். வாக்கு கண்யம் குற்றமற்றசெயல் முறை களால் நல்லன ஏற்பட்டுக்கொண்டிருக்கும். நல்லோர் பிரபல ஸ்தர்களினால் நற்பயன் ஏற்படுதல் ஆகும். எல்லாக்காரியங் களையும் திறம்படச் செய்விக்கும். தாரம்புத்திரர்களின் சௌக் கியம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ் டமம். புதன், வியாழன் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். அதற்கேற்ப செலவினமும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில்உத்தியோகத்தில் கண்யஸ்திதியும் நெறியாளர்களால் போற்றுதலும் ஆகும். நல்லோர் பிரபலஸ்தர்களின் தொடர்பில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஓர் சுப விசேஷம் செய்விக்கும். சகோதரர் புத்திரர்களுக்கு உயர்ஸ்திதியும் சௌக்கியமும் அளிக்கும்.

இயந்திர சாதனத்தில் புதியன ஒன்று வாங்குதல் ஆகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். டிசம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். அதற்கேற்ப அரச கண்யத்திலும் சுபவிசேஷங்கள் மனைவி வழியின் சௌகரியத்திலும்இலட்சிய போக்கில் செலவினை ஏற்கும். எல்லா நெருக்கடி பிரச்சினை களிலும் தக்கோரால் அனுகூலம் ஏற்பட்டு இஷ்டசித்தியை உண்டு பண்ணும். சகோதரர் புத்திரர் பௌத்திரர்களுக்கு நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கை டாம்பீக செல்வுடன் சொகுசு நிலைமையில் இருந்து வரும். டிசம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் மூன்று வகையில் வரச் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க நன்மைகள் ஏற்படும். செய்தொழில் உத்தியோகத்தில் மேன்மை ஸ்திதியளிக்கும். வீடுவாகன பிராப்தியில் நல்லசௌகரியம்தரும். புத்திரர்பௌத்திரர்களுக்கு உயர்வு தரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மத்துடன் நடந்துவரும். புண்ணிய ஸ்தலயாத்திரைசெய்யும். டிசம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில்நன்மை கள் வரச்செய்யும். செய்தொழில் உத்தியோகத்தில் அரசு அனுகூலம் தரும். பதவி உயர்வளிக்கும். எல்லாக்காரியங்களை யும் புத்திமேம்பாட்டில் வெற்றியாகநடத்தும். உற்றவர் அல்லது நெருங்கிய தொடர்புள்ளவர் மனஸ்தாபம்வரினும் தக்க சமயத்தில் அனுகூலம் செய்வர். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். டிசம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அரச கண்யத்தில் வரவாகிக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் நவம்பர் 26 தேதிக்கு மேல் நன்மையுண்டாகும். ஓர் புண்ணிய ஸ்தலம் சென்று வருதல் ஆகும். எல்லாக்காரியங்களையும் நிதான போக்கில் வெற்றியாக நடத்தச் செய்யும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 12, 13, 14தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"
49 ஆம் ஆண்டு மலர்ப்
பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
1	அணைகட்டிக் காக்க ஆர்த்தெழுவீர்!	161
2	அபிடேக பலன்	30
3	அபூர்வ கிரஹ நிலை	68
4	அருட்செல்வம்	541
5	அறநிலையங்களில் அரசின் குறுக்கீடு	217
6	அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனக் கருத்தரங்கு	421
7	ஆட்சியர், அரசு அறநிலையப் பணியாளர் சிந்தனைக்கு	297
8	இதழ் வழிச் சைவசமயக் கல்வி V. பாடம் 10, 11.	49, 105
	,, VI. பாடம் 1.	209
	,, VI. பாடம் 2.	345
	,, VI. பாடம் 3.	401
	,, VI. பாடம் 4.	497
9	இந்துப் பெருமக்களே விழிமின்! எழுமின்!	113
10	இந்துமத வளர்ச்சிக்கு விழித்தெழுவீர்!	57
11	இன்றைய வாழ்விற்குக் கம்பராமாயணம்	177, 233, 281
12	உவமையில் தோன்றும் உலகு	17
13	உயர்ந்தது சைவமா? அசைவமா? ஆய்வில் புது முடிவு	527

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
14	எதிர்காலம்	45, 100, 156, 204, 258, 292, 340, 396, 453, 495, 551, 601,
15	எது கோபம் ?	18
16	எது தவம் ?	19
17	எது வழிபாடு ?	144
18	கடிதம்	326, 332
19	கடிதங்கள்	82, 89
20	கணம்புல்லர்	38
21	கம்பரில் சில ஐய வினக்கள்	425
22	கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையார்	195
23	காரியார், நெடுமாறர்	90
24	காரைக்காலம்மையார் தொடங்கி வைத்த உத்தி	537
25	காவியத்தில் திருப்புமுனைகள்	123, 182, 238, 279, 313
26	கார்த்திகைத் திருவிழா	555
27	கீழே படியுங்கள்	367
28	குமரக்கட்டளை ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகப் பத்திரிகை	409
29	குருபூஜைவிழாவின் பொருட்டுப் பாடிய கவி	369
30	குறிஞ்சிப்பாட்டில் மெய்யுணர்வு	190
31	கேன்சர் நோயைத் தடுக்கும் மஞ்சள்	385
32	கோச்செங்கட்சோழர்	445
33	கோவில் நிலங்களுக்குக் குத்தகைப் பாக்கி 40 கோடி	304
34	சண்டேஸ்வர பிரஸாதம்	533
35	சீகாழித் தலக்குறிப்பில் செந்தமிழ்ப் பண்பாடு	486
36	சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுச் சிந்தனை	243
37	செந்தமிழ்போல் ஓங்கும் சிறந்து	176
38	செய்திகள்	42, 96, 153, 201, 255, 289, 333, 393, 450, 489, 546, 593
39	சைவ சித்தாந்தக் கல்லூரி ஓர் அன்பர் கடிதம்	484

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
40	தருமபுரம் குட முழுக்குக் காண வாரீர் !	457
41	தருமை ஆதீனம் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக பத்திரிகை	505
42	தருமை ஆதீனக் குருமூர்த்திகள் தோத்திரப் பாமாலை	571
43	தருமைக் குருபூஜை தரிசிக்க வருக	265
44	தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	6, 62, 117, 166, 222, 269, 305, 357, 414, 462, 510, 561
45	தாயின் அணைப்பு	439
46	தாலாட்டில் முகிழ்க்கும் பக்திச் சுவை	430
47	திருமுறைகளைப் போற்றுவோம்	73
48	திருக்குறள் – திருமந்திரம் ஓர் ஒப்பாய்வு	468
49	திருவூடல்	13
50	திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ்	க
51	தேவார உவமை	316
52	தொகையடியார்	311
53	நம்மைப் பேணும் அம்மை	320
54	நோஸ்ட்ராடமஸ் தீர்க்க சிந்தனைகள்	370
55	பதியிலார்	482
56	பதிகப் பெருவழி காட்டிய பாவலர்	324
57	பார்வையாளர் குறிப்புநகல்	86, 104, 128, 152, 155, 296, 319
58	புகழ்த்துணையார், கோட்புலியார்	249
59	பூசலார், மானியார், நேசர்	388
60	போதமும் சித்தியும்	27, 87, 127, 247, 386, 477, 521, 583
61	மக்கள் நலம்பெறக் காத்திருக்கிறார்கள்	1

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
62	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	23, 83, 187, 230, 329, 329, 382, 435, 473, 529, 579
63	மண்டோதரி என்னும் மாண்புறு நங்கை	587
64	மஹா சிவராத்திரி	129
65	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள்	133
66	முக்கனி	193
67	வாயிலார், முனையடுவார்	147
68	வான்பொய்ப்பினும் தான்பொய்யாக் காவிரி வற்றியது ஏன்?	353
69	விழுமம்சார் கல்வியில் சமயத்தைப் பயிற்றுவித்தலின் அவசியம்	377
70	வேதம் குறிப்பிடும் ஸரஸ்வதி நதி உண்மையே	21
71	ஸ்ரீ காமதகனமூர்த்தி	71
72	ஸ்ரீ கங்காளமூர்த்தி	327
73	வெள்ளாளபாளையம்ஸ்ரீ ஞானசம்பந்தவிநாயகர் பதிகம்	36
74	ஸ்ரீ ஞானபுரீசுவரர் சுவாமி திருக்கோயில் பெருவிழா சிறப்புத் திருநாள் விபரம்	264
75	ஸ்ரீ உமாமகேசுவரமூர்த்தி	481
76	GNANASAMBANDAM MAGAZINE	208

உ
சிவமயம்

கார்த்திகை மாதச் சிறப்பு நாட்கள்

17—11—90 சனி, முடவன் முழுக்கு. அதிகதிதி கரிநாள்.

18—11—90 ஞாயிறு, கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ பஞ்சமூர்த்திகளும் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்.

19—11—90 திங்கள், திருப்பனந்தாள், திருக்கடவூர் முதலிய தலங்களில் 1008 சங்காபிஷேகம்.

20—11—90 செவ்வாய், சதுர்த்தி விரதம். மூர்க்க நாயனூர் குருபூஜை.

21—11—90 புதன், சிறப்புலி நாயனூர் குருபூஜை.

23—11—90 வெள்ளி, சஷ்டிவிரதம், சிரவணவிரதம். திருப்பனந்தாள் ஸ்ரீ பிரகன்நாயகி அம்பாள் தீர்த்தம்.

28—11—90 புதன், சர்வ ஏகாதசி.

29—11—90 வியாழன், வியசிரா.

30—11—90 வெள்ளி, பிரதோஷம். பரணி தீபம்.

1—12—90 சனி, கிருத்திகை விரதம். பௌர்ணமி விரதம். தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். வேளூர்க் கிருத்திகை. திருவண்ணமலை தீபம். பௌர்ணமி விரத பூஜையில் திருச்சுடர் சாத்துதல். அக்னிமாலை சாத்துதல், பொறி நிவேத்யம். வைகானச, சர்வாலய தீபம். கணம்புல்லர் குருபூஜை.

2—12—90 ஞாயிறு, சில இடங்களில் பௌர்ணமி விரதம்.

5—12—90 புதன், அவமா - சங்கடஹர சதுர்த்தி.

7—12—90 வெள்ளி, ஆயில்ய விழா, வைசிரா.

9—12—90 ஞாயிறு, மஹாதேவாஷ்டமி. காலபைரவாஷ்டமி. திருவையாறு ஸ்ரீ ஆட்கொண்டார் தீர்த்தம்.

10—12—90 திங்கள், மெய்ப்பொருள் நாயனூர் குருபூஜை.

11—12—90 செவ்வாய், ஆனய நாயனூர் குருபூஜை.

13—12—90 வியாழன், மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

14—12—90 வெள்ளி, பிரதோஷம், குத்தாலம் கடைவெள்ளி ஸ்தலவிருக்ஷ பூசை.

15—12—90 சனி, மாதசிவராத்திரி.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. I
வெளிநாடு Regd. No. TN / MM 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல்

1.	சிற்றம்பலநாடிகள் அருள் வரலாறு	ரூ. 0-80
2.	திருநள்ளாறும் சனிபகவானும்	0—45
3.	பகாமாரியம்மன் அருள் வரலாறும் அபிராமி அந்தாதியும்	0—80
4.	நித்யகன்ம நெறி	1—50
5.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு	0—40
6.	சைவசமய வரலாற்றுப் பார்வை	6 00
7.	தருமைக் குருமணிகளின் அருள் வரலாறு	3—50
8.	சிவபூஜாவிதி	2—00
9.	சிவபூஜா தீபம்	0-80
10.	சைவ அனுட்டான விதி	1—40
11.	ஆசௌசதீபிகை	1—75
12.	புட்பபலன்	0—75
13.	சைவ அநுட்டான விதியும் அநுட்டான அகவலும்	0—45
14.	சைவஅநுட்டான அகவல் சிவபூஜைஅகவல்	2—00
15.	திருவருட்செய்தி (இரண்டாம் தொகுதி)	7—50
16.	மகாமகப் பெருவிழா	0—20
17.	செந்தமிழ்ப்பூம் பொழில் (5 ஆம் பாகம்)	3—50
18.	தேவிமகாத்மியச் சுருக்கம்	0—75
19.	சைவ சமய சாதனங்கள்	0—30
20.	ஆலய வழிபாடு	0—75
21.	திருமணம்	1—00
22.	ஆசாரக்கோவை	0—75

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம் - மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai. Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai. 10-11-90